358

## செல்வன்

# செந்தமிழ் வாசகம்




கம்பெனி.

பில்

# செல்வன்
# செந்தமிழ் வாசகம்

## முதற்படிவம்—பொதுப் பகுதி

[Paper used : 24 lbs. White Printing]

ஆசிரியர் :
G. மைக்கேல் பிள்ளை, M.A.

பதிப்பாசிரியர் :
மகாவித்துவான்
மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை

358 / 2 60

ஜெகசெல்வன் கம்பெனி

ராமவர்மபுரம் நாகர்கோவில் | தெப்பக்குளம் திருச்சிராப்பள்ளி

பதிப்புரிமை]

[விலை : 75 ந.பை.

முதற்பதிப்பு—நவம்பர், 1953
ஆறும் பதிப்பு (திருத்தியது)—ஏப்பிரல், 1959
ஏழாம் பதிப்பு—ஏப்பிரல், 1960

TB
O31(6) N60

# முன்னுரை

இத்தமிழ்ப்பாட நூல்கள், முதல் 3 படிவங்களிற்பயிலும் மாணவ மாணவியரின் தமிழறிவு வளர்ச்சியுற்று, அண்மையில் அரசியலார் வெளியிட்டுள்ள பாடத்திட்டத்துக்கியைய மொழித்திறன் பெற்று விளங்க வேண்டுமெனும் விழுமிய நோக்கங் கொண்டு வெளியிடப் பெறுவனவாகும். இப்பாட நூல்கள் அவ்வப்படிவத்துக்காகக் குறிப்பிடப்பட்டுள்ள செய்யுள், உரைநடைகள் அளவுக்கேற்பத் தரப்பட்டுள்ளன. பண்டைய புலவர், அரசர் முதலியவரைப் பற்றிய செய்திகளும், தமிழ் நாட்டு வரலாற்றையொட்டிய நிகழ்ச்சிகளும், பிற நாட்டு அறிஞர் வரலாறுகளும், நம் நாட்டுக் கலைச் செல்வங்களை விளக்கும் கட்டுரைகளும், விஞ்ஞானக் கலையறிவாற் கண்ட புதுமைகளும், பிற நாடு சென்று புதியன கண்ட அறிஞர் பெருமக்களின் அரிய செயல்களும், மாணவரின் பேச்சுத் திறனை வளர்த்தற்கான உரையாடல்களும் ஏற்ற பெற்றி எடுத்தாளப்பட்டுள்ளன. கற்றற்கெளிமை நோக்கி ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் சொற்பொருள் விளக்கமும், கட்டுரைப் பயிற்சியும், அறிவு விளக்க வினாக்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

மாணவரின் தகுதிக்கேற்பச் சொல்லாக்கமும். நடை உயர்வும் அமைந்து, அறிவு வளர்க்கும் கருவியாக வெளியிடப் பெறும் இப்பாட நூல்களைத் தமிழுலகம் ஆதரிக்குமெனும் உறுதியுடையேன்.

இப்பாட நூல்களை அன்புடன் கருத்தூன்றிப் பார்வையிட்டு, அரிய திருத்தம் பல செய்து, அச்சேற்றப் பெருந் துணையாயிருந்த உயர்திருவாளர் **மகாவித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளையவர்களுக்கு** என் நன்றி உரித்தாகுக.

ஆசிரியன்

131328

Kabeer Printing Works, Madras (4206)

# முதற்படிவம்—பொதுப்பகுதி

## பொருளடக்கம்


| பாடம் | உரைநடைப் பகுதி | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | தமிழகம் | ... | 1 |
| 2. | இளங்கோவடிகள் | ... | 7 |
| 3. | கறையான் | ... | 13 |
| 4. | பஞ்சதந்திரக் கதை | ... | 18 |
| 5. | நகைச்சுவை | ... | 24 |
| 6. | அசந்தாக் குகைகள் | ... | 30 |
| 7. | உழைப்பு | ... | 35 |
| 8. | வேள் பாரி | ... | 39 |
| 9. | புதிய கண்டம் கண்ட வீரர் | ... | 43 |
| 10. | மேட்டூர் அணை | ... | 49 |
| 11. | அவிவேக பூரணகுரு கதை | ... | 54 |
| 12. | இயேசுவின் இன்னுரைகள் | ... | 60 |
| 13. | கிராமக் கைத்தொழில் | ... | 63 |
| 14. | ஔவையார் வாழ்க்கை நிகழ்ச்சிகள் | ... | 69 |
| | **செய்யுட் பகுதி** | | |
| I. | கடவுள் வாழ்த்து | ... | 80 |
| II. | அறவுரை | | |
| | 1. திருக்குறள் | ... | 82 |
| | 2. நன்னெறி | ... | 87 |
| | 3. நீதி வெண்பா | | 89 |
| III. | கதை | ... | 90 |
| IV. | பல சுவை | ... | 92 |

## நாட்டு வணக்கம்

ஜன கண மன அதி நாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா

பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா

விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா

தவசுப நாமே ஜாகே
தவசுப ஆசிஷ மாகே

காயே தவ ஜய காதா

ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா

ஜயஹே! ஜயஹே! ஜயஹே!
ஜய ஜய ஜய ஜயஹே!

## தேசீய கீதம்

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீதான்
மக்கள் எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செலுத்துகிறாய்.

நின் திருநாமம், பஞ்சாபையும் சிந்துவையும்
குசராத்தையும் மகாராட்டிரத்தையும்
திராவிடத்தையும் ஒரிசாவையும் வங்காளத்தையும்
உள்ளக் கிளர்ச்சியடையச் செய்கிறது.

அது விந்திய இமாலய மலைகளில் எதிரொலிக்கிறது;
யமுனை கங்கை நதிகளின் இன்ப நாதத்தில் கலக்கிறது.
இந்தியக் கடல் அலைகளால் செபிக்கப்படுகிறது;

அவை நின் ஆசியை வேண்டுகின்றன; நின் புகழைப்
பாடுகின்றன;

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு

வெற்றி! வெற்றி! வெற்றி!

# முதற்படிவம்

## பொதுப் பகுதி

### 1. தமிழகம்




1. வடக்கே வேங்கடமலை, தெற்கே குமரி, கிழக்கும் மேற்கும் பெருங்கடல் எல்லையாய் அமையப்பெற்ற பெருநிலப் பரப்புத் தமிழகம். இதில் வாழ்கின்ற மாந்தர், கடல் கொண்ட இலெமூரியாக்

கண்டத்தினின்றும் பாரத நாட்டின் தென்னெல்லையிற் குடியேறிய பழங்குடியினராவர். இவர்கள் பேசிவரும் மொழி **தமிழ்.** இம்மொழி பேசப்பட்டு வரும் நாடாதலின், இதனைத் **தமிழகம்** என வழங்குவர்.

2. இத்தமிழகத்தைப் பண்டைக் காலத்து ஆட்சி செய்தவர் தமிழ் மன்னர். காலம் செல்லச் செல்ல, ஒரே குடும்பத்தினரான தமிழர், நாட்டை மூன்று பகுதிகளாகப் பிரித்து, சேர, சோழ, பாண்டியர் என்னும் பெயர் தாங்கிச் செங்கோலோச்சி வந்தனர். சேரருள் **சேரன் செங்குட்டுவனும்,** சோழருள் **சோழன் கரிகாலனும்,** பாண்டியருள் **பாண்டியன் உக்கிரப் பெருவழுதியும்** சிறந்து விளங்கினர். மூவேந்தரும் தமிழ்ப்புலமை மிக்கவராய்த் தமிழ்ப்பாக்கள் இயற்றியும், இயற்றுவித்தும் பெருமை பெற்றனர்.

3. தமிழ் மன்னருள் சேரன் செங்குட்டுவனுக்கு முன்னோனை **உதியன் சேரலாதன்** என்பான் தன்னுயிர் போலப் பிறவுயிர்களேயும் பாதுகாத்துச் செங்கோல் செலுத்தி வந்தான்; முன் காலத்தில் **பாரதநாடு** எனச் சிறப்புடன் வழங்கிய நாட்டைத் தன் பெயரோடு சார்த்தி வழங்குவதற்குக் காரணமாயிருந்தவனும், குருகுலத்தரசர்களுள் முதல்வனுமான **பரதன்** என்பவன் ஆண்டு வந்தான். அவன் வமிசத்தினராகிய **சந்திரகுலத்து** அரசருள் **கௌரவர்** எனவும், **பாண்டவர்** எனவும் இரு பிரிவினர் வாழ்ந்து வந்தனர். கௌரவருள் மூத்தவனை துரியோதனன், பாண்டவருள் மூத்தவனை **தருமனுக்கு** இளவரசு பட்டம் சூட்ட நினைத்த தன் தந்தை திருதராட்டி-

ரனைப் பொறுமையினாலும் பேராசையினாலும் தடுத்து, அப்பட்டத்தைத் தானே அபகரித்துக்கொண்டான். இதிலிருந்து படிப்படியாகப் பகை வளர்ந்து, பாரதப் போராய் முடிந்தது.

4. பாரதப் போர் பதினெட்டு நாள் வரை நடைபெற்றது. இரு திறத்தாரும் மற்ற மன்னர்களைத் தத்தமக்குத் துணைவர்களாகச் சேர்க்க முயன்று நாட்டின் பல பாகங்களுக்கும் தூதர்கள் மூலம் ஓலை அனுப்பினர். அதற்கிணங்கப் பாண்டவர் பக்கம் பல மன்னர்களும், கௌரவர் பக்கம் பல மன்னர்களும் சேர்ந்துகொண்டார்கள்.

5. தமிழ் நாட்டில் அரசு புரிந்த உதியன் சேரலாதனைப் போர்த்துணையாக்க இரு திறத்தாரும் முயன்றனர். உதியனோ, ஒருவர் பக்கமும் சேர விரும்பாமல், நடுவுநிலை வகித்து, இரு திறத்தாருக்கும் உதவி செய்ய விரும்பினன். எத்தகைய உதவி செய்யத் தக்கதென ஆராய்ந்தான்; அவ்வாராய்ச்சியின் பயனாக, இரு திறத்தார் படைகளுக்கும் பசிமாற்றும் பணியைச் செய்வதென முடிவு செய்தான். ஆற்றுவாராற்றல் பசியாற்றலன்றோ? அதனினும், அப்பசியை மாற்றல் விழுமியதன்றோ? விழுமிய இவ்வுதவியையே ஆற்றத் துணிந்தனன் உதியன். தமிழ் நாட்டினின்றும் யானைகள், ஒட்டகங்கள், வண்டிகள் ஆதியன அணிவகுத்துச் சென்றன. ஆறுகளும், காடுகளும், மலைகளும் கடந்து, நெடுந்தொலைவு உணவுப்பொருள்கள் கொண்டு செல்லப்பட்டன. சேனைகளின் எண்ணிக்கையோ மிகுதி. அச்சேனைகளின் ஒரு நாளுணவுக்கே மிகுதியான உணவுப் பொருள் வேண்டும். பதினெட்டு நாட்களுக்கெனின், பின்-

னும் அளவு பல மடங்கு அதிகரிக்கும். ஆயினும், உதியன் மனம் தளரவில்லை. இரவும் பகலும், காட்டிலும் நாட்டிலும், யானைகளும் குதிரைகளும் ஒட்டகங்களும் தொடர் தொடராகச் சென்று-கொண்டிருந்தன. உணவுப் பொருள்கள் போர்க்-களத்தில் மலைபோலக் குவிந்தன. இரு திறத்தாரின் நாலவகைப் படைகளும் உண்டு களித்தன. குறை-வில்லாமல் உணவளித்த உதியனைப் **பெருஞ்-சோற்று உதியன் சேரலாதன்** என மக்கள் சிறப்-பித்தார்கள். **புறநானூறு, சிலப்பதிகாரம்** போன்ற பழந்தமிழ் நூல்கள் இவ்வரலாற்றைக் கூறுகின்றன. தமிழ் நாட்டின் பண்டைய பெரு-மைக்கு இஃது ஒரு சான்ருய் அமைந்துள்ளது.

6. பாரத நாட்டின் மன்னர் யாவரும் பாரதப் போரில் கலந்துகொண்டனர் என்பதும், அவர்கள் சேனைகள் யாவற்றிற்கும் தமிழ் மன்னனுகிய உதி-யன் சேரலாதன் உணவளித்தனன் என்பதும் நூல்கள் வாயிலாக அறியக்கிடக்கின்றன. இதி-னின்றும் தமிழ் நாடு உணவுப் பொருள்கள் மிகுந்த நாடு என்பதை அறியலாம். தமிழரசன் பிற மன்-னர் சேனைகளுக்கு உணவளித்தது போன்று, தமி-ழரும் தங்களை நாடி வந்த வறியார்க்கு உண-வளித்து வந்தனர்; விருந்தினருக்கு வேண்டுவன அளித்து உபசரிப்பதைத் தம் கடமையாகக் கொண்டு வாழ்ந்தனர். இவ்வாறு தாமும் உண்டு, பிறருக்கும் உணாவளித்து வாழ்வதற்கு மிகுதியான உணவுப் பொருளை விளைவிக்க வேண்டுமன்ருே? தமிழரின் உழைப்பின் மிகுதியால், உணவுப் பொருள்களும் கைத்தொழிற்பொருள்களும் உற்-பத்தி செய்யப்பட்டன. தமிழர் தாம் உபயோகித்-

தவை போக, எஞ்சியவற்றை நாட்டின் பல பாகங்களுக்கும் அனுப்பினர்; பிற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்தனர். உள் நாட்டு வாணிகமும் வெளிநாட்டு வாணிகமும் சிறந்திருந்தன எனப் பண்டை நூல்கள் கூறுகின்றன.

7. பண்டை நூல்களினின்றும் தமிழகத்தில் தமிழ் மொழியொன்றே பேசப்பட்டு வந்ததென்பதையும், மொழி வளர்ச்சிக்காக அரசர் சங்கத்தை ஏற்படுத்திப் புலவர்களை ஆதரித்தனரென்பதையும் நாம் அறிகின்றோம். ஒரே மொழி பேசி வந்ததனால் தமிழர் ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்தனர்; அன்பில் வளர்ந்தனர்; உழைப்பால் உயர்ந்தனர்; வீரத்தால் திகழ்ந்தனர். அறச்செயல் புரியத் தமிழ் மொழி அவர்களுக்கு உதவியது. இக்காலை, தமிழகத்தில் பற்பல மொழிகள் வழங்குகின்றன. மக்களிடையே வேறுபாடு மிகுதியுமுள்ளது. தமிழர் ஒற்றுமை குலைந்து, உழைப்புக்குன்றி, மொழிப்பற்று ஒழிந்து, மக்கட்பண்பின்றி வாழ்கின்றனர். தமிழகம் முன்னைய சிறப்புப் பெற மக்கள் ஒன்றுபட்டு உழைத்து வருதல் வேண்டும்.

**சொற்பொருள் விளக்கம்:**

இலெமூரியாக் கண்டம் - கன்னியா குமரிக்குத் தெற்கே இருந்ததாகச் சொல்லப்படும் பெருநிலப்பரப்பு; கடல் பொங்கி இக்கண்டத்தை அழித்துவிட்டதாகக் கூறுவர். செங்கோல்- நல்ல ஆட்சி, பாண்டித்தியம் - அறிவு, ஆர்வம் - அன்பு, பா - செய்யுள், நடுவுநிலைமை - பகைவர் நண்பர் என்னும் வேறுபாடு இல்லாமல் எல்லோரையும் சமமாகக் கருதும் நிலைமை, ஈகை - கொடுத்தல், எய்தியவன்-அடைந்தவன், சார்த்தி-சாரச்செய்து, கௌரவர் - குருகுலத்தில் பிறந்தவர், பாண்டவர்-பாண்டுவின் புதல்வர், திருதராட்டிரன் - பாண்டுவின் தமையன், பிறவிக்

குருடன்; துரியோதனன் - திருதராட்டிரன் மக்கள் நூற்றுவருள் மூத்தவன், நால்வகைப் படை - யானைப்படை, குதிரைப் படை, தேர்ப்படை, காலாட்படை; புறநானூறு - புறப் பொருளைப் பற்றிக் கூறும் நானூறு செய்யுட்களைக் கொண்ட பழைய நூல், சிலப்பதிகாரம் - தமிழிலுள்ள ஐந்து பெருங் காப்பிய நூல்களுள் ஒன்று; மற்றவை, மணிமேகலை, ஜீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி என்பவை; எஞ்சிய வற்றை - மிகுந்தவற்றை, வாணிகம் - வியாபாரம், திகழ்தல் - விளங்குதல், குன்றி - குறைந்து.

## பயிற்சி:

1. எதிர்ச் சொற்கள்:—அகம் × புறம், பழைமை × புதுமை, பெருமை × சிறுமை, முன்னோன் × பின்னோன், புற-நானூறு × அகநானூறு, விருப்பு × வெறுப்பு, உள்நாடு × வெளி நாடு, ஒற்றுமை × வேற்றுமை, செங்கோல் × கொடுங்கோல்.

2. பிரித்தெழுது:—தமிழகம், பேராசை, செங்கோல், தத்தமக்கு, சோற்றுதியன், உணவளித்து, பதினெட்டு.

## வினாக்கள்:

1. 'தமிழகம்' என்பது யாது? அது எவ்வெல்லைக்குட்-பட்டது?

2. தமிழர் என்பவர் யாவர்? அவர் எங்கிருந்து வந்தவர்?

3. தமிழகம் முற்காலத்தில் யாவரால் ஆளப்பட்டது? அவர்களுள் சிறந்தவர் யாவர்?

4. 'உதியன் சேரலாதன்' என்பவன் யார்? அவன் காலத்தில் நடைபெற்ற போர் எது? அது நிகழக் காரணம் யாது?

5. பாரதப் போரில் உதியன் செய்த உதவி யாது? அத-னால் அவனுக்கு வழங்கிய சிறப்புப் பெயர் யாது?

6. தமிழரின் சிறந்த குணம் என்ன? பண்டை நூல்கள் அவர்களைப்பற்றி என்ன கூறுகின்றன?

7. தமிழகத்தில் முன்காலத்தில் பேசப்பட்ட மொழி எது?

8. அது மக்களுக்குச் செய்த உதவி என்ன?

9. இக்காலத் தமிழகத்தின் நிலை என்ன? அதற்குக் கார-ணம் யாது?

## கட்டுரையாக்கப் பயிற்சி:

'தமிழகமும் உதியன் சேரலாதனும்' என்ற தலைப்புடன் ஒரு கட்டுரை எழுது.

## 2. இளங்கோவடிகள்

'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்
தமிழ்கூறும் நல்லுலகம்'

என எல்லை கோலிச் சிறப்பிக்கப்படும் தமிழ் நாட்டை முன் காலத்தில் மூவேந்தர் ஆண்டுவந்த-னர். அவர்களுள் சேரவரசன் **இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன்** என்பான், தன் முன்னோர் புகழைத் தனதாக்கிக்கொண்டவன்; குடிகளிடத்து அன்பு மிக்கவன்; சோழ பாண்டியரைத் தன் வீரத்-தால் வென்று, அவர்களிடம் இறை வாங்கியவன்; இமயம் வரையில் தன் புகழ் பரப்பியவன். அவனது வீரத்தைக் கண்டு மகிழ்ந்த சோழன் தன் மகள் **நற்சோணை**யை அவனுக்கு மணம் புரிவித்தான். நற்சோணையிடத்துச் சேரலாதனுக்குப் பிறந்த புதல்வர்களே **சேரன்-செங்குட்டுவன், இளங்கோ** என்பவர்கள்.

2. புதல்வரிருவரையும் கண்ணிமையிற்காத்து வந்த சேரன், அவர்களுக்கு வேண்டும் கல்விப் பயிற்சியுமளித்து வந்தவுடன், 'சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே' என்ற உண்மை உணர்ந்து, அவர்களைக் குணக்குன்றுகளாய்த் திகழச் செய்-தான். செங்குட்டுவன் வீரம் மிக்கவனாகவும், இளங்கோ அறிவு நுட்பம், கடவுள் பத்தி, பிறர் மாட்டன்பு இவற்றாற் சிறந்தவராகவும் விளங்கினர்.

3. இவ்விருவருடன் சேரலாதன் ஒரு நாள் தன் அரசவையில் அமைச்சர் புடைசூழ வீற்றி-ருந்தான். அவ்வமயம் முக்காலும் அறிந்து சொல்லவல்ல நிமித்திகன் ஒருவன் அவண் அடைந்-தான். அவனை அரசன் அன்புடன் வரவேற்று

ஆசனத்து அமரச் செய்தான். அந்நிமித்திகன் இளவரசர் இருவரையும் உற்று நோக்கி, அரசனைப் பார்த்து, "அரசரே, மாநிலம் ஆளும் மதிநுட்பம்



வாய்ந்தவர் நும் புதல்வர்; ஆயினும், அவருள் அரசாளுதற்குரிய அங்கஇலட்சணங்கள் வாய்க்கப் பெற்றவர் இளங்கோவே," என்றான். இச்சொற்கேட்ட அரசனும் அமைச்சரும் 'மூத்தோனிருக்க இளையோன் முடி சூடல் பொருந்துமோ? இந்நிமித்திகன் கூற்று இருந்தவாறு என்னே!' என எண்ணினர்.

4. இளங்கோ நிமித்திகனைப் பார்த்து, "ஐயா, மூத்தோனிருக்க இளையோன் முடி சூடல் முறையோ? நீர் தகாத சொல் கூறினீர்! யான் இன்றே இவ்வரச வாழ்வு துறந்தேன்!" எனக்கூறி வெளியேறினர். தம்பியாரின் செயல் கண்ட செங்குட்டுவன் உளம் மாழ்கினன்; தனக்காகவே துறவு பூண்ட இளங்கோவை மனத்தால் வாழ்த்தினன்.

5. இளங்கோ சமண மடந்தோறும் சென்று நல்ல ஞானம் அடைந்து, வஞ்சி நகரின் கீழ்த் திசையிலுள்ள குணவாயிற் கோட்டம் என்னும் அருகன் கோயிலில் தங்கினர்; தமிழ் நூல்கள் பல பயின்று, தம்மிடம் வருவார்க்குத் தமிழைக் கற்பித்தனர்; தமக்காகவன்றிப் பிறருக்காகவே வாழ்ந்தனர். மக்கள் அவரை இளங்கோவடிகள் என்றே வழங்கினுர்கள்.

6. அக்காலத்தில் சோழ நாட்டில் காவிரிப்பூம்பட்டினத்தில் கோவலன், கண்ணகி என்பார் இருவரும் இல்லறம் நடத்தினர். நாடகக் கணிகையான மாதவியின் ஆடல் பாடல்களால் மயங்கி அவளை விரும்பிய கோவலன், கண்ணகியைத் துறந்து மாதவியின் மனையை அடைந்தான். கண்ணகி துயருற்றனள். தன் பொருள் அனைத்தும் இழந்த கோவலன், மாதவியினிடம் மனம் வேறுபட்டு, மீண்டும் கண்ணகியை அடைந்தான்; தான் பொருளிழந்ததைக் கூறி வருந்தினுன். அவள், 'வருந்தாதீர்' என்று கூறி, அவன் பொருள் முட்டுப்பாட்டை நீக்கத் தன் காற்சிலம்புகளுள் ஒன்றைக் கொடுத்தனள். அச்சிலம்பை விற்றுப் பொருளீட்ட விரும்பிய கோவலன் கண்ணகியைத் தன்னுடன் அழைத்துக்கொண்டு மதுரையை அடைந்தனன். அங்குக் கண்ணகியை மாதரி என்னும் ஆயர் மகளிடம் விடுத்து, மதுரையின் கடை வீதியை அடைந்து, அங்கு வந்த அரண்மனைப் பொற்கொல்லனிடம் சிலம்பைக் காட்ட, அவன் கோவலனை வஞ்சகமாகத் தன் மனைக்கு அழைத்துச் சென்று, அங்கிருக்கப் பணித்தான்; பின்பு அரசனிடம் சென்று தான் களவாடிய அரசியின்

சிலம்பைத் திருடியவன் கோவலனே எனப் பழி கூறி அவனைக் கொல்வித்தான். தன் கணவன் கள்வனாகக் கருதப்பட்டுக் கொலையுண்ட செய்தி கண்ணகிக்கு எட்டியது.

7. கண்ணகி சீற்றம் மிகுந்து, தன்னிடமிருந்த சிலம்பைக் கையில் கொண்டு, பாண்டியனிடம் சென்று வழக்குரைத்துத் தன் கணவனுக்கு நேர்ந்த பழியை நீக்கினள். பாண்டியன் நெடுஞ் செழியன் தன் பிழையை உணர்ந்து, 'ஆராயாது செய்த யானே கள்வன் !' எனக் கூறி, இருக்கையிலிருந்து கீழேவிழுந்து உயிர் துறந்தான். கண்ணகி கொண்ட கோபம் தணியாது, மதுரையைத் தீக்கிரையாக்கி, வைகை நதி வழியே சென்று, திருச்செங்குன்று என்னும் மலையை அடைந்தாள். மலை வாழ் குறவர் அவளைக் கண்டு, பெண்ணோ ! பேயோ !' என ஐயுற்றனர். அச்சமயம் விண்ணுலகினின்றும் இழிந்த விமானத்தில் அவள் ஏறிச் சென்றாள். இந்நிகழ்ச்சியைக் குறவர் கண்டு வியப்புற்றனர்.

8. வியப்புற்ற குறவர், மலை வளம் காண அங்குச் சென்றிருந்த செங்குட்டுவனை அணுகி, இச் செய்தியைத் தெரிவித்தனர். செங்குட்டுவனுடன் மதுரையிலிருந்து வந்திருந்த சீத்தலைச் சாத்தனார் என்னும் புலவர் மதுரையில் கண்ணகிக்கு நிகழ்ந்தவற்றைச் செங்குட்டுவனுக்கு எடுத்துக் கூறினர். அரசன் அது கேட்டு வியப்புற்றான் ; அவன் சகோதரரான இளங்கோவடிகளும் அதிசயித்தனர். கண்ணகியே அவ்வாறு விமானமூர்ந்து விண் சென்றவள் என அறிந்த அரசன், அவளுக்குக் கோயில் அமைக்க ஏற்பாடு செய்தான்.

9. சாத்தனர் இளங்கோவடிகளை நோக்கி, "அடிகளே, கற்புத் தெய்வமாகிய கண்ணகியின் வரலாற்றை நீங்கள் ஒரு பெருங்காப்பியமாக இயற்றியருளவேண்டும்!" என்று வேண்டினர். அடிகளும் அவள் வரலாற்றைப் பலர் வாயிலாகக் கேட்டறிந்து, சிலம்பு காரணமாக நிகழ்ந்த அவ்வரலாற்றைச் **சிலப்பதிகாரம்** என்னும் காவியமாக இயற்றினர்.

**சொற்பொருள் விளக்கம் :**

சான்றோன் - கல்வி, கேள்வி, ஒழுக்கங்கள் நிறைந்தவன்; வஞ்சி - சேரரின் தலை நகர்; கோட்டம் - கோயில்; குண வாயில் கோட்டம் - வஞ்சி நகரின் கிழக்கு வாயிலுள்ள அருகன் கோயில்; காவிரிப்பூம்பட்டினம் - காவிரி நதி கடலோடு கலக்குமிடத்திலுள்ள சோழரின் பண்டைத் தலைநகர்; அரசவை - அரச சபை; நிமித்திகன் - சோதிடன்; மாழ்குதல் - வருந்துதல்; ஊர்ந்து - ஏறிச் செலுத்தி; பொருளீட்டல் - பொருள் சம்பாதித்தல்; சிலம்பு - மகளிர் காலில் அணியும் ஆபரணம் (சிலம்புதல் - ஒலித்தல்); சீற்றம் - மிகுந்த கோபம்; ஐயுற்றனர் - சந்தேகித்தனர்; குறவர் - குறிஞ்சி நிலத்தவர்; சீத்தலை - ஓரூரின் பெயர்; அடிகள் - துறவியார்.

**பயிற்சி :**

1. **எதிர்ச்சொல் கூறு** :—புகழ், உண்மை, இளையோன், இல்லறம்.

2. **பிரித்தெழுது** :—ஆயிடை, மூவேந்தர், முக்காலம், இச்செய்தி, அச்சிலம்பு, இக்காலம், பொருளீட்ட, விமானமூர்ந்து, பொற்கொல்லன்.

**வினாக்கள் :**

1. இளங்கோவடிகளின் பெற்றோர் யாவர்?
2. இளங்கோவடிகள் துறவு பூணக் காரணம் என்ன?
3. மலை வளம் காணச் சென்ற செங்குட்டுவன் யாவருடன் சென்றான்?
4. அங்கு அவன் கேட்டறிந்த செய்தி யாது?

5. இளங்கோ சிலப்பதிகாரம்'இயற்றக் காரணம் யாது?

6. சிலப்பதிகாரம் எவர் வரலாற்றைக் கூறுவது?

7. கோவலன் காவிரிப்பூம்பட்டினத்தை நீங்கக் காரணம் என்ன?

8. அவன் கொலையுண்ட செய்தி கேட்டுக் கண்ணகி செய்ததென்ன?

9. கண்ணகி எங்குச் சென்றாள்? அங்கு நிகழ்ந்ததென்ன?

**கட்டுரையாக்கப் பயிற்சி :**

1. இளங்கோவடிகளின் இளமைப் பருவம்.
2. கண்ணகியின் துன்பம்.
3. இளங்கோவடிகளும் சிலப்பதிகாரமும்.

**இலக்கணம் :**

1. அரசன் வியப்புற்றான்.
2. குறவர் கண்டு, வியப்புற்றனர்.

முதல் வாக்கியத்தில், அரசன்—எழுவாய் ; வியப்புற்றான்—பயனிலை. இது ஓர் எழுவாய், ஒரு பயனிலையுடன் கூடிய வாக்கியம்.—இவ்வாறு வருவது **தனி நிலை வாக்கியம்.**

இரண்டாவது வாக்கியத்தில், குறவர்—எழுவாய், கண்டு, வியப்புற்றனர்—இரண்டு பயனிலைகள். இவற்றைக் **கண்டனர், வியப்புற்றனர்** என இரு வினைமுற்றுக்களாக எழுதலாம்.

இவ்வாறு, ஓர் எழுவாய் இரு பயனிலைகளைப் பெற்று வருவது '**தொடர் வாக்கியம்**' எனப்படும்.

## 3. கறையான்

1. நாம் சில வேளை நம் புத்தகங்களை ஒழுங்காக அடுக்கி வைக்காமல் ஈரமான இடத்தில் வைத்துவிடுகின்றோம். மீண்டும் அவற்றை எடுக்கும்போது அவற்றில் மண் படிந்திருக்கக் காணலாம். மண்ணைத் துடைத்தால், வெண்ணிற எறும்புகளைக் காணலாம். புத்தகங்களின் ஓரங்களும் அரிக்கப்பட்டிருக்கும். இவ்வாறு புத்தகங்களையும், பிற பொருள்களையும் அரிக்கும் எறும்பே **கறையான்** எனப்படும்.

2. கறையான் எறும்பினத்தைச் சேர்ந்தது. **செல், சிதலை, சிதல்** என்பன இதன் வேறு பெயர்களாகும். கறையானில் பல வகையுண்டு. அவை அரசக் கறையான், அரசிக் கறையான், வேலைக்காரக் கறையான் அல்லது சிற்பிக் கறையான், காவல் புரியும் சிப்பாய்க் கறையான் என்பனவாகும்.

3. கறையான்களில் சில வேலை செய்யாது சோம்பேறிகளாய் வயிறூரத் தின்று கொழுக்கின்றன. நாளடைவில் அவற்றிற்கு இறகுகள் முளைக்கின்றன. இறகுகள் முளைத்ததும் அவை வெளியே பறக்கின்றன. அவற்றையே நாம் செல், சிதலை, சிதல் என வழங்குகிறோம். அவை இறகு உதிர்த்துக் கீழே விழும். அப்போது மற்றக் கறையான்கள் அவற்றைத் தேடிக் கண்டு பிடித்து, அரசனும் அரசியுமாக்குகின்றன. அரசக் கறையான் வேலை செய்வதில்லை. அதன் தொழில் சந்ததியை விருத்தி செய்தலேயாகும். அரசிக் கறையான் மிகவும் முக்கியமானது. அரசிக் கறையான் இல்லாத இடத்தில்

மற்றக் கறையான்கள் வசிக்கமாட்டா. அரசிக் கறையான் இருபத்து நான்கு மணி நேரத்தில் எண்பதாயிரம் முட்டைகள் இடும். அம்முட்டைகள் எறும்புகளின் முட்டைகள் போன்றிருக்கும். அவற்றை மற்றக் கறையான்கள் ஓர் அறையில் பத்திரமாகக் கொண்டு போய்ச் சேர்க்கும்.

4. வேலைக்காரக் கறையான்கள் சகல வேலைகளையும் செய்கின்றன. கறையான்களின் இருப்பிடமாகிய புற்றைக் கட்டுதலும், ஆகாரத்தைச் சேகரித்தலும், முட்டைகளைப் பாதுகாத்தலும், இறகு



முளைத்த கறையான்களை வெளியே துரத்தலும் அவற்றின் வேலையாகும். சிப்பாய்க் கறையான்கள் மற்றக் கறையான்களுக்குக் கெடுதி ஏற்படாதவாறு புற்றைக் காக்கும். அவற்றின் தலை தட்டையாயும் உறுதியாயுமிருக்கும். அதை ஆயுதமாகக் கொண்டே அவை தம் எதிரிகளைத் துரத்தும். அவற்றை நாம் மிதிக்க நேருமாயின், நம் பாதங்-

களை அவை நன்கு கடித்துவிடும்; சிறு பூச்சிகளையும் எதிர்த்து நின்று போர் புரியும். சாகும் வரையில் அவை பின் வாங்கமாட்டா.

5. கறையான் தான் வசிப்பதற்காகக் கட்டும் மண்மேடு, புற்று எனப்படும். அது சில இடங்களில் இருபது அடி உயரமும் இருக்கும். கறையான் புற்று விசித்திரமான அமைப்புடன் காணப்படும். புற்றினுள் வெவ்வேருய் அமைந்துள்ள பண்டகசாலைகளும், உணவுச் சாலைகளும், தாழ்வாரங்களும், படிக்கட்டுகளும், ஏராளமான சிற்றறைகளும் காணப்படுகின்றன. அரசனும் அரசியும் வசிப்பதற்குத் தனிப்பட்ட அரச மாளிகையும் கட்டப்படும். அதனை அடுத்தே முட்டைகளும் உருப்பெருத கறையான்களும் வைக்கப்படும். உணவுச் சாலைகளும் அமைக்கப்படும்.

6. கறையான்கள் கூட்டம் கூட்டமாய்ச் சேர்ந்து வசிக்கும். அவை எல்லாப் பொருள்களையும் ஆகாரமாகக் கொள்ளும்; காய் கனிகள், உலர்ந்த மரங்கள், தோல் முதலியவற்றையும் தின்னும். அவை மற்றக் கறையான்கள் வெளிப்படுத்தும் கழிவுப் பொருள்களையும், தம்மினத்தில் இறந்தவற்றையும் தின்று பசியை ஆற்றிக்கொள்ளுகின்றன.

7. கறையான்கள் வெப்ப மண்டலங்களில் அதிகமாகக் காணப்படுகின்றன. அவற்ருல் பொருள்களுக்கு அதிக சேதம் உண்டாகிறது. ஆயினும், அசுத்தமான பொருள்களை உண்டு, ஆகாயத்தைச் சுத்தப்படுத்துகின்ற நன்மையான செயலும் கறையான்களால் நடைபெறுகின்றது.

### சொற்பொருள் விளக்கம் :

அரித்தல் - அழித்தல் ; சிற்பி - கல், மரம் முதலியவற்றில் உருவகங்கள் செதுக்குகின்றவன் ; பண்டகசாலை - பண்டங்கள் வைக்கப்படும் அறை ; உருப்பெருத - முழு வளர்ச்சியடையாத; பசியாற்றல் - பசியைத் தணித்தல்.

### பயிற்சி :

1. எதிர்ப்பதங்கள் :—

சோம்பேறி × உழைப்பாளி
கொழுத்தல் × இளைத்தல்
சுத்தமான × அசுத்தமான

2. பிரித்து எழுதுதல் :

வெவ்வேருக—வேறு + வேருக, சிற்றறை—சிறு + அறை, தம்மினம்—தம் + இனம், எண்பதாயிரம்—எட்டு + பத்து + ஆயிரம்.

### விளுக்கள் :

1. கறையானுக்கு வழங்கும் வேறு பெயர்கள் எவை ?
2. கறையான்களில் எத்தனை வகையுண்டு? அவை எவை?
3. அரசன் அரசிக் கறையான்களைப்பற்றி உனக்கு என்ன தெரியும் ?
4. சிற்பிக் கறையானின் வேலை என்ன ?
5. சிப்பாய்க் கறையானின் தன்மை யாது ?
6. புற்றில் காணப்படும் விசித்திர அமைப்பு யாது ?
7. கறையான் எவற்றை ஆகாரமாகக் கொள்ளும் ?
8. கறையானுல் ஏற்படும் நன்மை யாது ?

### கட்டுரையாக்கப் பயிற்சி :

'கறையான்களின் விசித்திர இருப்பிடம்' என்பதைப்பற்றி ஒரு கட்டுரை எழுது.

**இலக்கணம் :**

1. தமிழ் மக்கள் ஒற்றுமையுடன் வாழ்ந்தார்கள்; அன்பில் வளர்ந்தார்கள்; உழைப்பால் உயர்ந்தார்கள்; வீரத்தால் விளக்கமடைந்தார்கள்.

2. கண்ணகி கோவலனை நோக்கி, "நீர் வருந்தாதீர்," என்று கூறினாள்.

முதலால் வாக்கியத்தில் **தனி நிலை வாக்கியங்கள்** பல தொடர்ந்து வந்துள்ளன. ஆதலின், அவ்வாக்கியத்தைத் **தொடர் வாக்கியம்** என்பர்.

இரண்டாம் வாக்கியத்தில் கண்ணகி கோவலனிடம் கூறினாள் என்பது முக்கியமான வாக்கியம். அதனுடன் சேர்ந்துவந்திருக்கும் "நீர் வருந்தாதீர்," என்னும் வாக்கியம் துணை வாக்கியம். இவ்வாறு முக்கியமான வாக்கியமும் துணை வாக்கியமும் கலந்து வருவது, **கலவை வாக்கியம்** எனப்படும். இப்பாடத்தினின்றும் தனி நிலை வாக்கியம், தொடர் வாக்கியம், கலவை வாக்கியம் என்பவற்றிற்கு உதாரண வாக்கியங்கள் எழுது.

## 4. பஞ்சதந்திரக் கதை

1. கோதாவிரி நதிக் கரையில் ஒரு பெரிய வன்னி மரமிருந்தது. அதில் இலகுபதனன் என்னும் காக்கை ஒன்று வாழ்ந்து வந்தது. ஒரு நாள் வேடனொருவன் அங்கு வந்தான். அவன் தான் கொண்டு வந்த வலையை விரித்து, அதன்மீது பல வகைத் தானியங்களைத் தெளித்து, ஒரு செடி மறைவிற் பதுங்கியிருந்தான். காக்கை அவன் செயலைக் கவனித்துக்கொண்டிருந்தது.

2. அப்பொழுது சித்திரக்கிரீவன் என்னும் புரு அரசு தன் பரிவாரத்துடன் அங்கு வந்தது. அது கீழே சிதறிக்கிடந்த தானியங்களைப் பார்த்தது. "மனித சஞ்சாரமில்லாத இவ்விடத்தில் தானியம் எவ்வாறு வந்தது? எவரேனும் கொண்டுவந்து போட்டிருக்க வேண்டும். நாம் உண்மையை அறியாமல் இவற்றைத் தின்னலாகாது; தானியத்திற்கு ஆசைப்பட்டு ஆபத்தில் அகப்பட்டுக்கொள்ளலாகாது," எனக் கூறியது.

3. புரு அரசு கூறியதைக் கேட்ட ஒரு புரு, மிக்க செருக்குடன், "இவ்வாறு யோசித்தால், நமக்கு ஆகாரம் அகப்படாது. சந்தேகங்கொள்பவன், பொறுமையுள்ளவன், பிறர் பொருளாற் பிழைப்பவன், வெட்கப்படுபவன், மகிழ்ச்சி கொள்ளாதவன், பகைமையுள்ளவன் ஆகிய ஆறு பேரும் துன்பத்தையே அடைவர்," என்றது.

4. அதனைக் கேட்ட மற்றப் புருக்கள் அச்சமும் ஐயமும் நீங்கித் தானியங்களைத் தின்ன நிலத்தில் இறங்கி வலையில் அகப்பட்டன. புரு அரசு, "அந்தோ! என் சொல்லைக் கேளாமல் எல்லாரும்

வலையில் சிக்கிக்கொண்டனரே! நான் மட்டும் தனித்திருந்து பயன் என்ன?'' என்று சொல்லிக் கீழே பறந்து சென்று வலையில் சிக்குண்டது.

5. அதைப் பார்த்த வேடன் மட்டற்ற மகிழ்ச்சியுடன் வலையை நோக்கி வரத் தொடங்கினான். புருக்கள் அவன் வருகையைக் கண்டு அஞ்சித் தம் அரசைப் பார்த்து, ''நாங்கள் உன் சொல்லை அவமதித்ததனால், இத்துன்பத்துக்கு ஆளானோம்,'' என்றன. புரு அரசு, நடந்தது பற்றி வருந்த வேண்டா. வேடன் வருகிறான். எல்லாரும் வலையுடன் பறந்து செல்வோம்,'' என்றது. புருக்கள் அவ்வாறே பறந்தன.



6. வலையுடன் பறந்து செல்லும் புருக்களைக் கண்ட வேடன், வியப்புடன் அவற்றைப் பார்த்துக்கொண்டே நின்றான்; ''இவை ஒற்றுமையாகப் பறந்து செல்கின்றன. ஆயினும், இவற்றுக்குள் சண்டை ஏற்படும். அச்சமயம் இவை

கீழே இறங்கும். இறங்கியவுடன் இவற்றைப் பிடித்துக்கொள்ளலாம்,'' என எண்ணி அவை சென்ற திசை நோக்கி ஓடினன். ஆனல், சிறிது நேரத்தில் புருக்கள் கண்ணுக்கு மறைந்தன. வேடன் பெரிதும் ஏமாற்றமடைந்து நின்றுவிட்டான். இந்நிகழ்ச்சிகள் அனைத்தையும் இலகுபதனன் கவனித்துக்கொண்டிருந்தது. அது புருக்களின் பின் பறந்து சென்றது.

7. புரு அரசு தன் கூட்டத்தைப் பார்த்து, "கண்டகி ஆற்றங்கரையில் சித்திரவனம் இருக்கின்றது. அங்கு என் நண்பனை இரணியகன் என்னும் எலியரசன் வாழ்கின்றன். அவன் பல்லினல் இவ்வலையை அறுப்பான். ஆதலின், அங்குப் பறந்து செல்வோம்,'' என்றது. புருக்கள் எலியரசன் இருந்த இடத்தை நோக்கிப் பறந்து சென்று, அதன் வளையண்டை இறங்கின. புருக்கள் இறங்கின ஓசையைக் கேட்டு அவ்வெலியரசு அஞ்சி, வளைக்குள் பதுங்கிக்கொண்டது.

8. புருவரசு வளையருகில் சென்று, "நண்பனே, இரணியகனே,'' என அழைத்தது. அதன் குரல் கேட்ட எலியரசு, மிக்க மகிழ்ச்சியுடன் வளையை விட்டு வெளியே வந்து, "வருக! நண்பா, வருக! உணர்ச்சியொத்த நண்பருடன் பேசி மகிழ்தலினும் இவ்வுலகில் பெருமகிழ்ச்சி தரத்தக்கது வேறு யாதுளது?'' என்று கூறியது. பின்பு, புரு அரசின் காலில் சிக்கியிருந்த வலையைப்பார்த்து, "அடடா! இதென்ன? நண்பா, சிறந்த அறிஞனகிய நீயுமா வலையில் அகப்பட்டாய்?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டது. புருவரசு நடந்ததைக் கூறியது.

9. எலியரசு முதலில் புருவரசின் கால்களில் சிக்கியிருந்த வலேக் கயிற்றை அறுக்கத் தொடங்கியது. அப்போது புருவரசு, “ நண்பா, முதலில் என் பரிவாரத்தைப் பிணித்துள்ள கயிற்றை அறு. பிறகு என்னை விடுவி,'' என்றது. எலியரசு, “ தன்னைக் காத்துக்கொண்டு தன் பரிவாரத்தைக் காக்க வேண்டும். அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவற்றிற்கு உயிரே சிறந்த சாதனம். ஆதலால், உயிரைக் காப்பாற்றுவது, எல்லாவற்றையும் காப்பாற்றுவது ஆகும்,'' என்றது. புருவரசு, “ நண்பா, நீ சொல்வது முறையே. ஆயினும் முதலில் என் பரிவாரம் இன்பமடைவதையே நான் விரும்புவேன்,'' என்றது. எலியரசு அதற்கு உடன்பட்டு முதலில் பரிவாரத்தைப் பிணித்திருந்த கயிற்றை அறுத்தது. விடுதலே பெற்ற புருக்கள் மிக்க மகிழ்ச்சியடைந்து, எலியரசை வாழ்த்தி விடை பெற்றுச் சென்றன.

10. புருக்கள் சென்ற பின், இலகுபதனன் எலியரசிடம் சென்று, “ அப்பா, நீ சிறந்த அறிஞன் ; ஒழுக்கமுடையவன் ; ஆதலால், நான் உனது நட்பை அடைய விரும்புகிறேன்,'' என்றது.

11. எலியரசு, “ அப்பா, உனது தொழில் என்னைப் பிடித்துத் தின்பது. ஆதலின், நீ எனக்குப் பகை ; உன்னை நான் எவ்வாறு நண்பனுகக் கருத முடியும்? பகைவரிடம் நட்பு வளர முடியுமா ?'' என்றது.

12. இலகுபதனன், “ உன்னைப் பிடித்துத் தின்பதால் என் பசி தீர்ந்துவிடுமா ? நீ உயிரோடிருப்பின், புருவரசைப் போல நானும் உன்னல்

நலம் பெறுவேன். அதனுலேதான் உன் நட்பை நாடுகிறேன்,'' என்றது.

13. எலியரசு, "நீ என் பிறவிப்பகை. பகைவனுடன் நட்புக்கொள்ளுதல் தவறு. தண்ணீர் வெந்நீராயினும் நெருப்பை அவிக்கும். ஆதலின், எது செய்யத் தக்கதோ, அதைச் செய்தல் வேண்டும். தண்ணீரில் வண்டியும், தரையில் கப்பலும் செல்லுமா ?'' என்றது.

14. இலகுபதனன், "எலியரசே, உன் அறிவை மெச்சினேன். உன் அறிவு காரணமாக உன்னுடன் பழகவேண்டும் என்னும் விருப்பம் மிகுகின்றது. நீ உடன்படாவிடில் நான் உண்ணு நோன்பு கொண்டு இங்கு இறப்பேன். இஃது உண்மை,'' என்றது.

15. எலியரசு, "உனது சொல்லை நம்புகிறேன்; உன்னை என் நண்பனுக ஏற்றுக்கொள்ளுகிறேன். நாம் இருவரும் ஒத்த மனத்தினராய் வாழவேண்டும்,'' என்றது.

16. அவையிரண்டும் நெடுநேரம் பேசிக்கொண்டிருந்து, மகிழ்ச்சியுடன் பிரிந்து சென்றன.

**சொற்பொருள் விளக்கம் :**

இலகுபதனன் - சுலபமாகப் பறப்பவன், சித்திரக்கிரீவன் - அழகிய கழுத்தையுடையவன், பரிவாரம் - கூட்டம், செருக்கு - கர்வம், அச்சம் - பயம், மட்டற்ற - அளவில்லாத, இரணியகன்- பொன்னிறமானவன், பிணித்துள்ள - கட்டியிருக்கின்ற, நலம் - நன்மை, நோன்பு - விரதம்.

**பயிற்சி :**

1. எதிர்ச்சொற்கள் எழுது:—நண்பு,உண்மை,இன்பம், மகிழ்ச்சி.

2. பிரித்தெழுது :—வேடனெருவன், ஏமாற்றமடைந்தவன், எலியரசன், வளையருகில், புருவரசு.

**வினுக்கள் :**

1. வேடன் செடியில் பதுங்குமுன் செய்தது என்ன ?

2. புரு அரசு தானியத்தைக் கண்டவுடன் யாது கூறியது?
3. செருக்குக்கொண்ட புரு கூறியது என்ன ?
4. துன்பத்தையே அடைபவர் யாவர் ?
5. புருக்கள் வலையில் சிக்கியதைக் கண்ட புரு அரசு செய்தது யாது ?
6. புருக்கள் வேடன் கையிலகப்படாமல் எவ்வாறு தப்பிச் சென்றன ?
7. அவை எவ்வாறு விடுதலை பெற்றன ?
8. புரு அரசு தன் பரிவாரத்தின் நன்மையே நாடி வாழ்ந்தது என்பதை எவ்வாறு அறியலாம் ?
9. காக்கை எலியரசின் நட்பைப் பெற விரும்பியது ஏன் ?
10. இடஞ்சுட்டி விளக்கு :—'தண்ணீர் வெந்நீராயினும் நெருப்பை அவிக்கும்.'

**கட்டுரையாக்கப் பயிற்சி :**

புருக்களும் எலியரசும், இலகுபதனனும் எலியரசும்.

**இலக்கணம் :**

1. முதற்பத்தியிலுள்ள தனி நிலை வாக்கியங்களையும் தொடர் வாக்கியங்களையும் எடுத்தெழுது.
2. புருவரசு, 'நண்பா, என் பரிவாரம் இன்பமடைவதையே நான் விரும்புவேன்,' என்றது. இது என்ன வாக்கியம்?
3. (அ) கோதாவரி நதிக் கரையில் ஒரு பெரிய வன்னி மரம் இருந்தது. அதில் ஒரு காக்கை வாழ்ந்து வந்தது.
(ஆ) ஐயா, உனது பெயரென்ன ?
(இ) நண்பா, என் பரிவாரத்தைப் பிணித்துள்ள கயிற்றை அறு.
(ஈ) அந்தோ ! எல்லாப் புருக்களும் வலையில் சிக்கிக்கொண்டனவே !

முதல் இரு வாக்கியங்கள் 'வன்னிமரம் இருந்தது; காக்கை வாழ்ந்து வந்தது,' எனச் செய்தியைத் தெரிவிக்கின்றன. ஆதலின், அவை **செய்தி வாக்கியங்கள்** எனப்படும்.

இரண்டாவது வாக்கியம், 'உனது பெயர் என்ன ?' என்ற வினவைத் தருகிறது. இது **வினா வாக்கியம்.**

மூன்றுவது வாக்கியம், 'கயிற்றை அறு' என்ற கட்டளையைத் தெரிவிக்கிறது. இது **கட்டளை வாக்கியம்.**

நான்காவது வாக்கியம், 'அந்தோ! சிக்கிக்கொண்டனவே!' என இரக்கமாகிய உணர்ச்சியைத் தெரிவிக்கின்றது. இது **உணர்ச்சி வாக்கியம்.** இது வியப்பு, கோபம், இரக்கம் முதலிய உணர்ச்சிகளைத் தெரிவிக்கும்.

நால்வகை வாக்கியங்களுக்கும் இப்பாடத்திலிருந்து உதாரணமெழுது.

## 5. நகைச்சுவை

1. 'உப்பில்லாப் பண்டம் குப்பையிலே' என்ற பழமொழியை அறியாத தமிழர் இலர். உப்புக் குறையினும், உப்பில்லாவிடினும் பதார்த்தங்கள் சுவையில் குறைகின்றன. விருப்பமான உணவும் வெறுப்பான உணவாகின்றது. காரணம் என்ன? நமது நா, சுவையறிந்து, 'இது சுவை குறைந்தது; இது சுவை மிக்கது,' என நமக்கு அறிவிக்கின்றது. நாவுக்கு இனிய உணவு நலம் அளிக்கின்றது. நம் முன்னோர் இதனை உணர்ந்தே நாவால் நுகரப்படும் சுவையை ஆறுகப் பகுத்து, அறு சுவை உண்டியை ஆக்கினர். நாவால் நுகரப்படும் இவ்வறுசுவையேயன்றிச் செவியால் நுகரப்படும் சுவைகளும் உள. அவற்றைப் புலவர் ஒன்பது சுவைகளென்பர்.

2. எருக்க மாலை அணிந்து, உடலெங்கும் சாம்பல் பூசி, அழுதுகொண்டும் சிரித்துக்கொண்டும், பொருளற்ற பற்பல சொற்களைக் கூறிக்கொண்டும் ஒருவன் வருகின்றான். அவனைக் காண்கிறவர் நகைக்கின்றனர். அவன் யார்? அவன் ஓர் உன்மத்தன். அவனைக் கண்டவர் நகையாடக் காரணமென்ன? அவன் செயலும், சொல்லும் காண்பவருக்கும் கேட்பவருக்கும் நகைச் சுவையைப் பயக்கின்றன. நகைச்சுவை உடலுக்கு உரன் அளிக்கின்றது. அதனால், இரத்த ஓட்டம் நன்முறையில் அமைகின்றது. அது உள்ளத்திற்கு மகிழ்ச்சியை அளிப்பதனால், கவலைகள் மறைகின்றன; துன்பம் நீங்கி, இன்பம் மிகுகின்றது.

3. நற்பயன் விளக்கும் நகைச்சுவை தோட்டி முதல் தொண்டைமான் வரையுள்ளார் அனைவரையும் மகிழ்ச்சிக் கடலில் திளைக்கச் செய்-கின்றது. முன் காலத்தில் அரசர் அவைகளில் நகைச்சுவை தோன்றப் பேசும் புலவர்களும், விகட கவிகளும் இருந்தார்கள். அவர்கள் தங்-கள் பேச்சினால் அவையிலுள்ளவர்களை மகிழச் செய்தார்கள். அரசரும் தம் கவலைகளை மறந்து இன்புற்றனர். கிருட்டிண தேவராயர் என்ற விசயநகர மன்னர் சபையில் தெனாலிராமன் தன் செயலாலும் சொல்லாலும் மக்களுக்கு நகைச்-சுவை அளித்தான்.

4. பண்டைப் புலவர் பலர் நகைச்சுவை-படப் பேசும் ஆற்றல் வாய்க்கப் பெற்றிருந்தனர். எட்டயபுரத்து மன்னரது சபையில் கடிகைமுத்-துப் புலவர் என்பவர் இருந்தார். அவர் நகைச்-சுவை பயக்கும் சொற்களைச் சொல்லுவதில் திறன் வாய்ந்தவர். அவர் ஒரு நாள் தம் மனைவியின் திவசத்திற்காகக் கடையில் பொருள்கள் பல வாங்கி, அவற்றை மூட்டையாக கட்டித் தலைமீது வைத்துக்கொண்டு தம் வீடு நோக்கி நடந்தார். அச்சமயம் எட்டயபுரத்தரசர் அவ்வழியே வந்தார். புலவர் தலைமீது மூட்டையைக் கண்டதும், அவர் "புலவரே, என்ன செய்தி? மூட்டையை ஏன் தலை-மீது வைத்துச் செல்கிறீர்?" எனக் கேட்டார். புலவர் உடனே, "அரசே, என் தலைவிதிவசம்,," என்று பதிலளித்தார். அவர் கூற்று, 'என் தலைவி திவசம்' எனவும், 'என் தலை விதி வசம்' எனவும் இரு பொருள்பட்டு நகைச்சுவை அளித்தலைக்

கண்ட அரசர் மனமகிழ்ந்து, அப்புலவருக்கு ஓர் ஏவலாளைத் தம் செலவில் அமர்த்தினர்.

5. ஒரு சமயம் அப்புலவர் நோய்வாய்ப்பட்டிருந்த போது, அவர் மகள் பாலை அழுக்குத் துணியில் நனைத்து அவர் வாயில் பிழிந்தாள். அழுக்கு நாற்றம் வீசியதனால், புலவர் பாலைக் கீழே துப்பினர். அவள், "பாலும் கசக்கின்றதோ?" எனக் கேட்டனள். புலவர் உடனே, "பாலும் கசக்கவில்லை; துணியும் கசக்கவில்லை," என்று நகைச்சுவை பயக்கத் தம் மகள் செய்த தவற்றை எடுத்துக் காட்டினர்.

6. திருநெல்வேலியில் **அழகிய சிற்றம்பலக் கவிராயர்** என்பவர் இருந்தார். அவர் இருபொருள் பயக்கும் சொற்களாய், இடத்துக்குத் தக்கனவாய், உடனுக்குடன் நயம்படச் பேசிப் பிறரை மகிழ்விக்கும் இயல்பினர். ஒருநாள் அவர் புலவர் பலருடன் அளவளாவிக்கொண்டிருந்தார். அவர்களுள் ஒருவர் மற்றொருவருடைய பொடி மட்டையை எடுத்து ஒளித்து வைத்துக்கொண்டார். பொடி மட்டைக்கு உரியவர் அதைக் கேட்டபோது, அவர் நகைத்தார். அதைக் கண்ட புலவர், 'பொடி வைத்துத்தானே நகை செய்யவேண்டும்,' என்றார். 'பொடி மட்டையை ஒளித்து வைத்துக்கொண்டுதான் சிரிக்க வேண்டும்,' எனவும், 'பொடி வைத்துத்தான் தட்டான் நகை செய்யவேண்டும்,' எனவும் இரு பொருள்படப் பேசியதைக் கேட்டவர் மகிழ்ந்தனர்.

7. மற்றொரு சமயம், ஒருவர் அப்புலவரை நோக்கி, "ஐயா, உங்களுக்கு மாதம் வருவாய் எவ்வளவு வருகிறது?" என்று கேட்டார். அவர்,

"மாசம்பத்து" எனக் கூறினர். அக்கூற்று, 'மாசம் பத்து' எனவும், 'மா சம்பத்து' எனவும் இரு பொருள்பட்டு நகைச்சுவை அளித்ததை அறிந்து, கேட்டவர் அவரைப் புகழ்ந்தனர்.

8. தமிழ் நாட்டில் நகைச்சுவை பெரிதும் போற்றப்பட்டு வந்தது. தமிழ் நூல்களில் நகை விளைவிக்கும் வரலாறுகள் ஆளப்பட்டுள்ளன. செருக்கு மிக்க புலவர் ஒருவர் ஒரு கிராமத்தி-னருகில் சிறுவர்கள் விளையாடிக்கொண்டிருப்-பதைக் கண்டு, அவர்கள் படிப்பறியாதவர்கள் என நினைத்து அவர்களிடம் கொச்சைத் தமிழில், "சோறு எங்கே விக்கும்?" எனக் கேட்டனர். சிறுவனொருவன் வேடிக்கையாக, "சோறு தொண்-டையில் விக்கும்," என பதிலளித்தான். 'சோறு எங்கே விற்கும்?' எனத் தாம் கூருததை எண்ணிப் புலவர் அவமானமுற்ருர். அங்கு நின்றவர் அச்-சிறுவனது கூரிய அறிவை வியந்தனர்.

9. மற்ருெரு புலவர், தமக்கு நிகரான புலவர் இலர் எனச் செருக்குற்று, ஒரு சிறுவனை நோக்கி, 'இவ்வூரில் எனக்கு நிகரான புலவர் இருக்கின்ற-னரா!' எனக் கேட்டனர். சிறுவன் அவரது செருக்கை அடக்க எண்ணி, 'ஐயா, இவ்வூரில் புலவர் பலருளர். முதலில் எனது கேள்விக்கு நீர் பதில் கூறின், உமக்கு அவர்களைக் காண்பிப்-பேன்,' என்ருன். அவரும் 'சரி' என, அவன் தன் கையிலிருந்த கோலினல் தரையில் கோடு-களைக் கீறி, 'இது என்ன எழுத்து?' என்ருன். புலவர் அக்கோடுகளைப் பலமுறை உற்று நோக்கித் தாம் கற்ற எழுத்துக்களோடு ஒப்பிட்டார். அவ ரால் இன்ன எழுத்தெனக் கூற இயலவில்லை. சிறு-

வன் அவரைப் பார்த்து‘ “புலவரே, கையினுல் எழுதுவது கையெழுத்து; கோலினுல் எழுதப்பட்ட இது கோலெழுத்து. உமக்குத் தெரியவில்லையே!” என்ருன். புலவர் வெட்கமடைந்தனர்.

10. மக்கள் நகைச்சுவையைப் பெரிதும் விரும்புகின்ருர்கள். குழந்தைகள் பேசும் மழலைச் சொற்கள் பெற்ருேர்க்கும் மற்ருேர்க்கும் இன்பம் பயக்கின்றன. நாடகங்களில் நகைச்சுவையாளர் பேச்சு மிகுதியும் போற்றப்படுகின்றது. நகைச் சுவை நாடகங்கள் நடிக்கப்படுகின்றன. நகைச் சுவை மக்களுக்கு இன்பம் தந்து, அவர்கள் வாழ்க்-கையை நலனுறச் செய்வதாகும்.

**சொற்பொருள் விளக்கம்:**

சுவை - உருசி, அறுசுவை - ஆறுவகையான சுவை (அவை உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு, புளிப்பு, கைப்பு, தித்திப்பு என் பவை), நுகர் - அனுபவி, உன்மத்தன் - பைத்தியக்காரன், உரன் - வன்மை, தொண்டைமான் - அரசன், திளைக்க - மூழ்கி இன்புற, அவை - சபை, விகடகவி - வேடிக்கையாகப் பேசு பவன், நோய்வாய்ப்படல் - வியாதியுறல், தவறு - பிழை, நகை-ஆபரணம் (சிரிப்பு), சம்பத்து - செல்வம், செருக்கு - கர்வம், விக்கும் - விக்கல் செய்யும், நிகர் - சமம், கோல் - கம்பு, மழலை - குழந்தைகள் பேசும் பொருளற்ற சொற்கள்.

**பயிற்சி:**

1. **இரு பொருள் கூறு:**—பொடி, நகை, கசக்கவில்லை.

2. **வாக்கியத்தில் அமை:**—அளவளாவி, நகையாடினர், நயம்பட.

3. **எதிர்ச்சொற்கள் எழுது:**—மிக்கது, இன்பம், நகை, அறிவு, விருப்பு.

4. **பிரித்தெழுது:**—அறுசுவை, அறுகால், எவ்வளவு, நகைச்சுவை, மழலைச்சொல்.

### வினுக்கள் :

1. உப்பைப் பற்றி வழங்கும் பழமொழி யாது?
2. சுவை எத்தனை வகைப்படும்?
3. உன்மத்தனுடைய செயல்கள் யாவை?
4. நகைச்சுவையின் பயன் யாது?
5. கடிகை முத்துப் புலவரின் நகைச்சுவை எதனுல் விளங்குகிறது?
6. சிற்றம்பலக் கவிராயர் எவ்வாறு பேசுவதில் வல்லவர்?
7. புலவரைச் சிறுவன் 'செருக்கிழக்கச் செய்த வரலாறு யாது?
8. நகைச்சுவை நிகழும் இடங்கள் எவை?

### கட்டுரையாக்கப் பயிற்சி :

நகைச்சுவையும் மக்கள் வாழ்க்கையும், புலவரும் சிறு-வனும்.

### இலக்கணம் :

1. வாக்கியம் எத்தனை வகைப்படும்? வகைக்கோர் உதா-ரணம் எழுது.

2. உன்மத்தன் எருக்க மாலையணிந்து, சாம்பல் பூசி, அழுதுகொண்டும் சிரித்துக்கொண்டும் வந்தான்.

இத்தொடர் வாக்கியத்தை தனி நிலை வாக்கியங்களாக எழுது.

3. ஒருவன் வருகின்றுன்.—இவ்வாக்கியத்தில் 'ஒருவன்' என்னும் எழுவாய் உயர்திணை, ஆண் பால், ஒருமை எண், படர்க்கை இடம் ஆகும். அதனுல் 'வருகின்றுன்' என்னும் பயனிலையும் உயர்திணை, ஆண் பால், ஒருமை எண் படர்க்கை இடமாய் அமைந்துள்ளது.

ஒரு வாக்கியத்தில் எழுவாயும், பயனிலையும் திணை, பால், இடம் இவற்றில் ஒத்திருக்கவேண்டும்.

## 6. அசந்தாக் குகைகள்

1. பண்டைத் தமிழகம் கலைகளுக்கு இருப்பிடமாய் விளங்கியது. தமிழ்நாட்டுக் கோயில்களே சிறந்த ஓவிய சிற்ப நிலைக்களங்களாய்த் திகழ்கின்றன. இசை, கவிதை, சிற்பம், ஓவியம் என்பன **அழகிய கலைகள்** எனப்படும். இவை நமது தமிழ் நாட்டை முற்காலத்தில் ஆண்ட சேர சோழ பாண்டியர்களாலும், அவர்களுக்குப் பின் வந்த நாயக்க மன்னர்களாலும், மராட்டிய மன்னர்களாலும் போற்றி வளர்க்கப்பட்டன. அவர்களால் கட்டப்பட்ட கோயில்களும் கோபுரங்களும் கலைச்செல்வங்களாய்த் திகழ்ந்திருக்கின்றன. அயலார் ஆட்சி ஏற்பட்டு, அவற்றைப் போற்ருததனுல், அவை சீர்குலைந்துள்ளன. இந்தியாவின் புராதனச் சிற்பத் திறனை உலகிற்கு அறிவிப்பதற்குச் சாதனமாய் அமைந்தவற்றுள் **அசந்தாக் குகை**களிலுள்ள ஓவியங்களும் சிற்பங்களும் சிறப்பாகக் கூறத்தக்கன.

2. ஐதராபாது நாட்டிலுள்ள ஔரங்காபாதின் அருகிலுள்ளது **அசந்தா** என்னும் சிற்றூர். அதிலிருந்து சுமார் மூன்றரை மைல் தூரத்தில் அசந்தாக் குகைகள் இருக்கின்றன. அவை அடர்ந்த காடுகளுள்ள ஒரு பள்ளத்தாக்கின் தெற்குப் பாகத்தில் செங்குத்தான மலையில் அமைந்துள்ளன. முப்பத்தைந்தடி முதல் நூற்றுப் பத்தடி உயரம் வரையில் அக்குகைகள் வெட்டப்பட்டுள்ளன. அங்கு ஏறக்குறைய முப்பது குகைகள் இருக்கின்றன. அவை யாவும் ஒரே காலத்தில் வெட்டப்பட்டன அல்ல. அறிஞர் அவற்றை மூன்று

பிரிவாகப் பிரித்துள்ளனர் ; கி. மு. 200-ஆம் ஆண்டிலிருந்து கி. பி. 200-ஆம் ஆண்டிற்குள் வெட்டப்பட்டுள்ளவை ஒரு பகுதி ; கி. பி. ஆரும் நூற்ருண்டில் வெட்டப்பட்டவை மற்ருெரு பகுதி ; கி. பி. ஏழாம் நூற்ருண்டில் வெட்டப்பட்டவை எஞ்சிய பகுதி. அவற்றுள் காணப்படும் சிற்ப வேலைகளும், சித்திர வேலைப்பாடுகளும் காண்பவர் மனத்தைக் கொள்ளை கொள்ளும் தன்மையுடையவை.

3. புத்த மதத்தைச் சார்ந்த துறவியர் பலர் தம் மாணவருடன் அங்கு வசித்து வந்தனர். அக்குகைகள் அவர்களுக்குப் பள்ளியறைகளாகவும் வழிபடும் இடங்களாகவும் பயன்பட்டன. அவற்றின் வாயில்களுக்கு எதிரே உட்புறம் புத்தரின் சிலை காணப்படுகின்றது. கி. பி. 640-ல் இந்தியாவுக்கு வந்து அக்குகைகளைப் பார்த்துச் சென்ற சீன யாத்திரிகரான **யுவான் சுவாங்** என்பவர், அக்குகைகளில் **தின்ஞகர்** என்னும் புத்த ஞானியார் நூற்றுக் கணக்கான மானவருடன் வசித்ததாகக் கூறியிருக்கின்ருர்.

4. மலைப் பாதையிலிருந்து பிரிந்து சென்ருல், அங்கு ஓடும் **பகோரா** என்னும் ஆறு பல கிளை வாய்க்கால்களுடன் வளைந்து வளைந்து செல்வதைப் பார்க்கலாம். அவ்வாற்றுப் படுகையிலிருந்து நூறடித் தூரத்தில் அரைமதி வடிவமாயுள்ள செங்குத்தான ஒரு பாறையில் அக்குகைகள் அமைக்கப்பட்டுள்ளன. முதற்கண் திறந்த வெளித் திண்ணைகள் காணப்படுகின்றன. அவை தூண்களால் தாங்கப்படுகின்றன. வெளித் திண்ணைகளைக் கடந்து உள்ளே சென்ருல், விசாலமான அறை

காணப்படும். அது சுமார் முப்பத்தைந்தடி நீள-மும் இருபதடி அகலமும் கொண்டது. அதைச் சுற்றிலும் உட்புறமாகப் பள்ளியறைகள் அமைந்-துள்ளன. அந்த விசாலமான அறையே வழிபடும் இடமெனக் கூறலாம். தொண்ணூற்று நான்கடி நீளமும் நாற்பத்தோரடி அகலமுள்ள அறைகளு-



மிருக்கின்றன. மலையைக் குடைந்து இப்படிப்-பட்ட அறைகளை அமைப்பதற்கு எவ்வளவு திறமை வேண்டும்! நம் முன்னேரின் அறிவு ஆற்றல்-களுக்கும், அக்கால அரசர்கள் சிற்ப ஓவியக்கலை-களை ஆதரித்தற்கும் அவை அறிகுறிகளாய் விளங்குகின்றன-

5. அக்குகைகளின் தூண்களிலும் சுவர்களி-லும் ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. அவற்றைத் தீட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்ட வர்ணங்கள் எப்பொருள்களாலானவை என்பது அறிய முடிய-வில்லை. பல நூற்றுண்டுகளாய் அழகுடன் விளங்-கும் அவ்வோவியங்களைத் தீட்டிய ஓவியப் புலவர்,

நம் நாட்டினரே என்பதை எண்ணும்போது நமக்கு ஏற்படும் மகிழ்ச்சிக்கு அளவுண்டோ?

6. அரசர் அரசியல்களையும் பாமர மக்களையும் சித்திரித்துக் காட்டும் ஓவியங்கள் எத்துணை அங்குக் காணப்படுகின்றன! உணவு சமைத்தல், தண்ணீர் சுமத்தல், ஆவணத் தெருவில் பொருள்களை விற்றல், வேட்டையாடுதல், யானைகள் போர் செய்தல், இசைக் கருவிகள் வாசித்தல், ஆடல், பாடல் முதலியவற்றை விளக்கும் ஓவியங்களும் தீட்டப்பட்டுள்ளன. அவற்றைப் பார்ப்பதால், முற்கால மக்களின் நடையுடை பாவனைகளை அறியலாம். நமது நாட்டில் புத்த மதம் சிறப்புற்றிருந்த நிலையையும் அவை உணர்த்துகின்றன. பல நூற்றுண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த மக்கள் கலைகளை வளர்த்த உண்மையை அறியும் சாதனமான அவற்றைக் கண்ணுறுபவர் தாமும் அந்த நுண்கலைகளை வளர்க்க வேண்டும் என்ற ஆவலுள்ளவராவர்.

### சொற்பொருள் விளக்கம் :

கவிதை - செய்யுள், நிலைக்களம் - இருப்பிடம், ஓவியம் - சித்திரம், சிற்பம் - கல் மரம் உலோகங்களில் உருவங்கள் செதுக்கும் வேலை, புராதனம் - பழமை. கி. மு. - கிறிஸ்து பிறப்பதற்கு முன், கி. பி. - கிறிஸ்து பிறந்த பின், எஞ்சிய - மிகுதியான, கொள்ளை கொள்ளும் - கவர்ந்துகொள்ளும், பள்ளியறை - படுக்கையறை, வழிபடுமிடம் - தொழுமிடம், நடையுடை பாவனை - ஒழுக்கம் பழக்க வழக்கங்கள் முதலியன.

### பயிற்சி :

1. எதிர்ச்சொற்கள் எழுது :—புராதனம், தண்ணீர், மகிழ்ச்சி, உட்புறம்.

2. இரு பொருள் எழுது :—மதி, திட்டு, ஆவணம், சமைத்தல்.

3. பிரித்தெழுது :—சிற்றூர், முப்பத்தைந்தடி, ஆற்றுப்படுகை, பள்ளியறைகள், நூற்றாண்டு.

## வினாக்கள் :

1. தமிழ் நாட்டுக் கோயில்கள் எவ்வாறு திகழ்கின்றன?
2. அசந்தாக் குகைகள் எங்குள்ளன?
3. அசந்தாக் குகைகளின் ஓவியச் சிறப்பு யாது?
4. அவ்வோவியங்கள் எவற்றை விளக்குகின்றன?
5. அவற்றால் மக்கள் அறிய வேண்டுவன யாவை?

## கட்டுரையாக்கப் பயிற்சி :

அசந்தாக் குகையும் பண்டைக்காலக் கலைகளும்.

## இலக்கணம் :

வாக்கியங்களை முடி :—

தமிழகம் கலைகளுக்கு இருப்பிடமாய் ———.

புத்த ஞானி மாணவருடன் ———.

இவை அறிகுறிகளாய் ———.

# 7. உழைப்பு

1. இந்த உலகிற்பிறந்த உயிர்கள் அனைத்தும் உழைக்க வேண்டும். உழைப்பு அவ்வவ்வுயிர்களின் உடலமைப்புக்கேற்றவாறு அமையும். உருவிற்சிறிய புழுக்கள் பூமியினுள் துவாரம் உண்டாக்கி, அடியிலுள்ள மண்ணை மேற்பரப்பிற்குக் கொண்டு வந்து, மேற்பரப்பிலுள்ள அசுத்தத்தையும், சாரமில்லாத மண்ணையும் கீழே கொண்டு செல்கின்றன. இதனுல், பூமி சுத்தமாகின்றது; நிலம் வளம் அடைகின்றது. எறும்புகள் இடைவிடாமல் வேலை செய்துகொண்டேயிருக்கின்றன. இவற்றின் உழைப்பைச் சிறப்பிக்கவே 'சோம்பேறியே, எறும்பண்டை போ,' என்ற பழமொழி வழங்குகின்றது. தேனீக்கள் மலர்தோறும் சென்று, தேனைச் சேகரிக்கின்றன. சிறு குழந்தைகள் தம் கைகளையும் கால்களையும் ஆட்டிக்கொண்டேயிருக்கின்றன. இதுவே அவற்றின் உழைப்பு என்னலாம்.

2. குடியானவர்கள் நிலத்தை உழுது, பண்படுத்தி, உரமிட்டு, நவ தானியங்களையும், பிற விளைபொருள்களையும் விளைவிக்கின்றனர். சிலர் ஆடு மாடுகளை வளர்த்து, அவற்றிலிருந்து கிடைக்கும் பால், மோர், தயிர், வெண்ணெய், நெய் முதலியவற்றை விற்றுப் பிழைக்கின்றனர். கருமான், தச்சன் முதலியோர் விவசாயிகளுக்கு வேண்டிய கலப்பை, மண்வெட்டி, அரிவாள், ஆணி முதலியவற்றையும்; மேசை, நாற்காலி, பெட்டி முதலியவற்றையும் செய்கின்றனர். இவர்களைத்

தவிர, வாணியர், சேணியர், கொத்தர் முதலிய-வரும் தத்தம் தொழிலைச் செய்து வருகின்றனர்.

3. பட்டணங்களிலுள்ள தொழிற்சாலைகளில் பொறி வல்லுநரும், பொறி இயக்குநரும், பற்பல சிறு தொழில் புரிபவரும் உழைக்கின்றனர். வியா-பாரிகள் வியாபாரம் செய்கின்றார்கள். அரசாங்க அதிகாரிகளும், ஆசிரியர்களும், விஞ்ஞான ஆராய்ச்சியாளரும் தத்தம் தொழிலை முறையே செய்து வருகின்றனர். இதனால், நாம் எல்லாரும் உழைக்க வேண்டுமென்பது தெரிகிறதல்லவா ?

4. அற்ப உயிர்களென எண்ணப்படும் எறும்பு, தேனீ முதலியன, ஓயாது உழைக்கின்-றன. ஆனால், மானிடருட்சிலர் உழைக்காமல், சோம்பேறிகளாயிருக்கின்றனர். அந்தோ ! அவர்-கள் தங்கள் காலத்தை வீணாகக் கழிக்கிறார்கள் ! ஆதலின், அவர்கள் பிற உயிர்களிலும் இழிந்தவர்-களாகவே கருதப்படுவார்கள். அவர்களைச் சோம்-பேறிகளெனப் பிறர் இகழ்வர். சோம்பேறிகள் தங்களுக்கும் நன்மை தேடிக்கொள்ளமாட்டார்கள். அவர்கள் உபயோகப்படுத்தாத இரும்பு போன்ற-வர்கள். இரும்பு உபயோகிக்கப்படாத போது துருப்பிடித்து அழிந்துவிடுகின்றது. அதுபோலவே சோம்பேறிகளின் தேகமும் வலிமை இழந்து நோய் வாய்ப்பட்டு அழிகின்றது. சோம்பேறிகள் சோற்-றுக்கு வழியில்லாமல் பிறரிடம் சென்று யாசிக்கின்-றார்கள். ‘இரத்தல் இழிவு,’ என்பதை அவர்கள் உணர்வதில்லை ; சிற்சில சமயங்களில் பிறர் பொருளைத் திருடுவதும் உண்டு ; அதனால் தண்-டனை பெறுவதும் உண்டு. இவ்வாறு உழைப்-

பில்லாத மக்கள் பற்பல துன்பங்களுக்கு ஆளா-கின்றனர்கள்.

5. உழைப்பு உயர்வைத் தரும். எளியவரும் தம் உழைப்பினால் பணக்காரராகலாம். அமெரிக்கா-வில் வாழ்ந்த பெரிய பணக்காரராகிய இராக்கு-பெல்லர், கென்றி போர்டு முதலியவர்கள் ஏழைக-ளாயிருந்து, உழைப்பினால் உயர்ந்தவர்களே. விஞ்-ஞான ஆராய்ச்சியாளரான எடிசனும் உழைப்-பினால் உயர்வு பெற்றவர்களுள் ஒருவர். ஆதலால், நாமும் சோம்பேறிகளாயிராமல் உழைத்துப் பொருள் தேடி உலகில் சிறந்து வாழ வேண்டும். 'உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ ?' என்றார் கபிலர்.

### சொற்பொருள் விளக்கம் :

வளம் - செழிப்பு, கருமான் - கொல்லன், விவசாயி - குடியானவன், பொறி இயக்குநர் - இயந்திரம் செலுத்துபவர், நவதானியம் - ஒன்பது விதமான தானியங்கள், இரத்தல் - யாசித்தல், உறுதி - நன்மை.

### பயிற்சி :

1. எதிர்ச்சொற்கள் எழுது :—உயர்வு, எளியவர், சுத்தம்.

2. பிரித்தெழுது :—பற்பல, சிற்சில, அவ்வுயிர், தத்தம்.

### வினாக்கள் :

1. உயிர்கள் அனைத்தும் உழைக்க வேண்டும் என்பதை எவ்வாறு அறியலாம் ?

2. சிறு குழந்தைகள் எவ்வாறு உழைக்கின்றன ?

3. குடியானவர்கள் செய்யும் வேலை என்ன ?

4. கருமான், தச்சன் ஆகியோர் உழைப்பினால் நமக்குக் கிடைக்கும் பொருள்கள் யாவை ?

5. பட்டணங்களில் மக்கள் எவ்வாறு உழைக்கின்றனர்கள் ?

6. சோம்பேறிகள் என்று யாரை வழங்கலாம்?

7. சோம்பேறிகள் சிறிய உயிர்களினும் இழிந்தவர்கள் என்பது எதனால்?

8. சோம்பேறிகளுக்குப் புத்தி புகட்டக்கூடிய பிராணி எது?

9. எறும்பைப்பற்றி வழங்கும் பழமொழி எதனை உணர்த்துகின்றது?

10. சோம்பேறிகள் ஏன் துன்பமடைகின்றார்கள்?

11. உழைப்பின் சிறப்பு யாது?

### கட்டுரையாக்கப் பயிற்சி:

'உழைப்பின் உயர்வும், சோம்பலின் இழிவும்' என்பதைப் பற்றி ஒரு கட்டுரை எழுது.

### இலக்கணம்:

1. உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?
சோம்பேறியே, எறும்பண்டை போ.
அந்தோ! அவர்கள் தம் காலத்தை வீணாக்குகின்றார் களே!—இவை இன்ன வகை வாக்கியமென எழுது.

2. தெரிந்துகொள் :—
யான் ஓடினேன்—யான் எழுவாய்; தன்மை இடம்; ஒருமை எண்; ஓடினேன் - பயனிலை.
யாம் ஓடினோம்—யாம் - எழுவாய்; தன்மை இடம்; பன்மை எண்.
நீ உண்டாய்—நீ - எழுவாய்; முன்னிலை இடம்; ஒருமை எண்.
நீர் உண்டீர்—நீர் - எழுவாய்; முன்னிலை இடம்; பன்மை எண்.

தன்மை, முன்னிலை இட எழுவாய் பயனிலைகளுக்கு இடம், எண் இவை பொருத்தமாயிருத்தல் வேண்டும். அவற்றிற்குத் திணை, பால் கூற முடியாது. ஒருமை, பன்மை மாத்திரம் புலப்படும்.

# 8. வேள் பாரி

1. பண்டைத் தமிழ் நாட்டில் வறியவர்க்குத் தம் பொருளை வழங்கி அழியாப் புகழ் கொண்டவர் பலர் வாழ்ந்தனர். யாவர் எதனைக் கேட்பினும் வரையாது கொடுப்பவர் '**வள்ளல்கள்**' எனப்படுவார்கள். அவ்வள்ளல்களுள் **பாரி** என்பவன் ஒருவன். அவன் **வேள்** என்ற பட்டம் பெற்றவன்; உழுவித்துண்ணும் வேளாளர் மரபைச் சேர்ந்தவன்; முந்நூறு ஊர்களைக் கொண்ட **பறம்பு** நாட்டிற்குத் தலைவன். அவன் பறம்பு மலையில் பகைவர் புகுவதற்கரிய அரண் ஒன்றை அமைத்துச் சிறப்புடன் வாழ்ந்து வந்தான்.

2. பறம்பு மலையிலுள்ள கோட்டை மிகப் பெரியது; அழகும் காவலும் அமைந்தது; பகைவர் முற்றினும், மழை பொய்ப்பினும் அங்குள்ளாருக்குக் குறைவில்லாமல் உணவு அளிப்பது; உழுது பயிரிட்டுப் பெறவேண்டாமல், இயற்கை வளத்தால் கிடைக்கும் பலாப்பழம், வள்ளிக் கிழங்கு, மூங்கில் நெல், தேன் முதலிய உணவுப் பொருள்களை மிகுதியாகக் கொண்டது. எந்நாளும் வற்றாத இனிய நீர்ச் சுனைகள் அங்கு இருந்தன. வீரம் செறிந்தவர் பலர் அங்கு வாழ்ந்தனர்.

3. பறம்பு நாட்டின் தலைவனாகிய பாரியும் வீரம் மிக்கவன்; படை வீரத்துடன் கொடை வீரமும் வாய்ந்தவன். அவனுக்கு உயிர்த்தோழரான **கபிலர்** என்னும் புலவர் அவனை உலகைப் புரக்கும் மாரிக்கு ஒப்பிட்டுள்ளார். பாரி கொடைக்கே எடுத்துக் காட்டாய் விளங்கியவன். 'கொடுக்கிலாதானைப் பாரியே எனக் கூறினும் கொடுப்பாரிலர்,'

எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் பாரியைக் குறிப்பிடுகின்றார்.

4. பாரி ஒரு நாள் மாலைப் பொழுதில் தன் அழகிய தேரில் ஏறிக்கொண்டு மலை வளங்காணச் சென்றான். காட்டில் முல்லைக்கொடி ஒன்று பற்றிப் படர்வதற்குக் கொழு கொம்பில்லாமல் காற்றினால் அசைந்து தத்தளிக்கக் கண்டான். எவ்வுயிரிடத்-



தும் அருள் பாலிக்கும் அவ்வள்ளல் அம்முல்லைக் கொடி பெருந்துன்பமுறுவதாக எண்ணி, அதன்-மீது இரக்கங்கொண்டான். உடனே தன் தேரை அதன் அருகில் நிறுத்தினான். குதிரையை அவிழ்த்து ஓட்டினான். முல்லைக் கொடியை மென்மையாகத் தூக்கித் தன் தேர்மீது படர விட்-டான். என்னே பாரியின் அருள்!

5. குடிகள் பாரியின் குதிரை தேரின்றி வருதலைக்கண்டு திடுக்கிட்டார்கள்; 'பாரிக்கு யாது

சம்பவித்ததோ !' எனக் கலங்கினார்கள்; தேர்ச் சுவட்டைத் தொடர்ந்து சென்று, முல்லைக் கொடியருகே தேர் கொழுகொம்பாக நிற்றலைக் கண்டு வியப்புற்றார்கள். பாரி மகிழ்ச்சியுடன் நடந்து அரண்மனையை அடைந்தான்.

6. பாரியின் புகழ் தமிழ் நாடெங்கும் பரவிற்று. தன்னையடைந்த இரவலர்க்குத் தன் முந்நூறு ஊர்களையும் அளித்த பாரி, அரசரினும் மிகுந்த புகழடைந்தான். அவன் புகழ் கேட்ட மன்னர் அவன்பால் பொறாமை கொண்டனர். தமிழ் மன்னர் மூவரும் ஒன்று கூடினர்; பறம்பு மலையை முற்றுகையிட்டனர். பாரியின் வீரம் அவர்களைப் புறமுதுகிட்டு ஓடச் செய்தது. அவனுடன் நேரில் போர் செய்ய அஞ்சிய அவர்கள், வஞ்சனையால் அவனைக் கொன்றார்கள். பாரியின் பூதவுடல் மாய்ந்தது. ஆனால், அவன் புகழுடம்பு இன்றும் நிலவுகின்றது.

**சொற்பொருள் விளக்கம்:**

வழங்கி - கொடுத்து, வேள் - உபகாரி, மரபு - குலம், வள்ளல் - ஈகைத் தன்மையுடையவன், பாரி - கடையெழுவள்ளல்களுள் ஒருவன், அரண் - கோட்டை, முற்றுதல் - முற்றுகையிடுதல், நீர்ச்சுனை - மலை நீரூற்று, செறிந்த - நெருங்கிய. கொடை - ஈகை, மாரி - மழை, புரக்கும் - காப்பாற்றும், கொழுகொம்பு - பற்றுக்கோடு (ஆதாரம்), இரவலர் - யாசகர்.

**பயிற்சி :**

1. **எதிர்ச் சொற்கள் எழுது** :—இயற்கை, மாலை, மென்மை, போற்று.

2. **பிரித்தெழுது** :—*நீர்ச்சுனை*, எந்நாளும், அவ்வள்ளல், *முந்நூறு, முந்நீர்.*

### வினுக்கள் :

1. வள்ளல்கள் என்பவர் யாவர் ?
2. பாரியின் நாடும் மலேயும் எவை ?
3. பாரியின் மலேநாடு எத்தகைய வளனுடையது ?
4. பாரி எவ்வுயிரிடத்தும் அருளுடையவன் என்பது எதனுல் தெரிய வரும் ?
5. மூவேந்தரும் பாரியைக்கொல்லக் காரணம் என்ன ?
6. பாரியின் உயிர்த்தோழர் யாவர் ?
7. அவர் பாரியை எவ்வாறு புகழ்ந்தனர் ?
8. பாரியின் வீரம் எத்தகையது ?

### கட்டுரையாக்கப் பயிற்சி

பாரியின் குணச் சிறப்பு, முல்லேக்குத் தேரீந்த பாரி—இவற்றைப்பற்றிக் கட்டுரை எழுது.

### இலக்கணம் :

**சொற்களே இடம் விட்டு எழுதுதல் :** கொடையும் வீரமும் அவன்பால் விளங்கின. இவ்வாக்கியத்தில் 'அவன்பால்' என்பதை 'அவன் பால்' எனப் பிரித்தெழுதாமல் சேர்த்தே எழுதவேண்டும். 'பால்' என்பது இடப்பொருள் உணர்த்தும் வேற்றுமையுருபு. ஆதலின், அது பெயருடன் சேர்த்தே எழுதப்படல் வேண்டும்.

கொடையும் வீரமும் அவன்பால் விளங்கின. இதில் '**உம்**' என்பது எண்ணுப்பொருள் உணர்த்தும் இடைச்சொல். வேற்றுமையுருபு முதலிய இடைச்சொற்கள் பெயருடன் சேர்த்தே எழுதப்படல் வேண்டும்.

# 9. புதிய கண்டம் கண்ட வீரர்

1. மாந்தர் தம் அறிவின் திறனால் பற்பல புதுமைகளைக் கண்டுள்ளனர். இயற்கையை ஆராய்ந்து அரிய உண்மைகளைக் கண்டு, மக்கள் சமுதாயம் நன்முறையில் வாழத் துணை புரிந்த பெரியார் பலராவர். விஞ்ஞான ஆராய்ச்சியால் பற்பல வியத்தகு கருவிகளை அமைத்து உதவுவதும், மக்கள் உட்புகாத நாடுகளைக் கண்டு, அவற்றின் பண்புகளை நன்குணர்ந்து, வெளியுலகிற்கு அந்நாடுகளைப்பற்றிய செய்திகளை உணர்த்துவதும் ஆற்றல் மிக்க அரிய செயல்களேயாம். இத்தகைய செயற்கரிய செயலைச் செய்து புகழ் பெற்றவர் **தாவீது லிவிங்ச்தன்** என்பவர். இப்பெரியாரே **இருண்ட கண்டம்** எனப்படும் ஆப்பிரிக்காக் கண்டத்தைக் கண்டு பிடித்தவராவர்.



2. இவர் **ச்காத்துலந்து** நாட்டில் **சிளாச்கோ** நகருக்கருகிலுள்ள ஒரு சிற்றூரில் 1813-ஆம் ஆண்டு மேத் திங்கள், 19-ஆம் நாள் பிறந்தார். இவர் பெற்றோர் வறியராதலின், அவர் சிறிது கல்வி பயின்ற பின் பஞ்சாலையில் வேலைக்கமர்ந்து, பொருளீட்ட வேண்டியவரானார். ஆயி-

னும், கல்வியில் ஆர்வமுடைய இவர், பகலில் வேலை செய்த பின், இரவில் கிரேக்க மொழியையும் இலத்தீன் மொழியையும் பயின்று வந்தனர்; இவ்வாறு பதின்மூன்ருண்டுகள் வேலை செய்தும் கல்வி பயின்று அறிவை வளர்த்து வரலாயினர். பின்னர், மருத்துவக் கல்லூரியிற் சேர்ந்து மருத்துவக் கலையிற் சிறந்து விளங்கினர். கல்லூரி விடுமுறை நாட்களில் பழைய பஞ்சாலையில் தொழிலாற்றிப் பெறும் ஊதியத்தைக்கொண்டு கல்விச் செலவை நிருவகித்தனர்.

3. மருத்துவராகிய லிவிங்ச்தன் கடவுள் பத்தி நிறைந்தவர். இவர் ஒரு நாள் கிறித்தவத் தொண்டரின் கூட்டத்துக்குப் போயிருந்தனர். அவ்வமயம் ஆப்பிரிக்காவிலுள்ள காடு மேடுகளிலெல்லாம் அலைந்து திரிந்து கிறித்தவ சமயத்தைப் பரவச்செய்த டாக்டர் **மொப்பாட்டு** என்பவர் அங்கு வந்திருந்தார். அவர் ஆப்பிரிக்காவுக்குச் செல்லத்தக்க கிறித்தவத் தொண்டர் ஒருவர் வேண்டும் என்ருர். லிவிங்ச்தன் தாம் செல்ல விரும்புவதாகக் கூறினர். இலண்டன் கிறித்தவத் தொண்டர் குழுவினர், இவரை அங்கு அனுப்ப இசைந்தனர். அக்குழுவினர் செய்த பொருளுதவியால், இவர் 1840–ஆம் ஆண்டு, **டிசம்பர்த்**-திங்கள், 8–ஆம் நாள் இலண்டனிலிருந்து ஆப்பிரிக்காவுக்குப் புறப்பட்டார்.

4. லிவிங்ச்தன் மூன்று மாதம் கப்பற்பிரயாணம் செய்து, ஆப்பிரிக்காவின் தென்கோடியிலுள்ள **கேப்பு டவுன்** என்ற இடத்தில் இறங்கி, மாட்டு வண்டியில் ஏறி, ஆப்பிரிக்காவின் உட்பாகங்களைக் காணச் சென்ருர். அது வரை இக்-

கண்டத்தின் உட்பாகங்களைப் பற்றிய செய்தியை அறிந்தவர் எவருமிலர். கொடிய விலங்குகள் வாழும் அடர்ந்த காடுகளும் மலைகளும் அங்கு உண்டு. முரட்டுக் குணமுள்ள நாகரிகமற்ற மக்களே அவ்விடங்களில் வாழ்ந்து வந்தார்கள். இக்காரணங்களால் அக்கண்டம் '**இருண்ட கண்டம்**' என வழங்கப்பட்டது. லிவிங்ச்தன் மனத் துணிவுடன் எண்ணூறு கற்களுக்கு அதிகமான தூரம் அப்பயங்கரக் காடுகளில் பிரயாணம் செய்தார். இவர் **குருமன்** என்றவிடத்தில் தங்கி, அங்குள்ள மக்களுக்கு மருத்துவ உதவியும் சமயப் பணியும் புரிந்தார்; பின்பு **மாபோட்சா** என்னுமிடத்தை அடைந்தார். அங்குச் சிங்கங்கள் அதிகம். அங்குள்ள மக்கள் அவற்ருல் துன்புற்ருர்கள். இவர் அவற்றை வேட்டையாடினர். ஒரு சமயம் ஒரு சிங்கம் இவர்மீது பாய்ந்து இவர் தோளைப் பற்றிக்கொண்டது. இவர் நண்பர் அதனை நோக்கிச் சுட்டார். குண்டு தவறினதால், அச்சிங்கம் அவர்மீது பாய்ந்தது. ஒருவன் தன் கையிலுள்ள ஈட்டியினுல் அதைக் குத்தினுன். உடனே, அம்மனிதன்மீது அது பாயவே, இவர் நண்பர் அதனை மறுமுறை சுட, அது இறந்தது. சிங்கம் தாக்கியதால் இவர் தோளெலும்புகள் முறிந்துவிட்டன. அதனுல், பல மாதங்கள் இவர் துன்புற்ருர்.

5. பின்னர் லிவிங்ச்தன் **கலகாரி** என்னும் பாலை வனத்தைக் கடந்து செல்ல விழைந்தார்; ஐரோப்பியர் இருவருடன் அதனைக் கடந்துசெல்ல முயன்ருர்; வழியில் அளவிறந்த துன்பங்களுக்காளானுர்; ஆனுல், பல புதிய இடங்களைக் கண்-

டார்; **நாமி** என்ற ஏரியையும், **சாம்பசி** என்ற ஆற்றையும் கடந்து சென்றார். வழியில் ஐந்து பெரிய அருவிகளைக் கண்டு அவற்றிற்கு **விக்டோரியா அருவி** எனப் பெயர் வழங்கினார். அடுத்த ஆண்டு இவர் இங்கிலாந்து சென்றார். இவர் தாம் கண்ட விந்தைகளையெல்லாம் மக்களுக்கு எடுத்துக் கூறினார். இவர் கூறிய செய்தி இருண்ட ஆப்பிரிக்காவை யாவருக்கும் தெரிந்த இடமாக்கியது. இவர் பின்னும் இருமுறை ஆப்பிரிக்காவுக்குச் சென்று **நியாசா, தங்கனியாகா, மூரோ** என்ற ஏரிகளைக் கண்டறிந்தார்.

6. லிவிங்ச்தன் 1862-ஆம் ஆண்டு, மீண்டும் ஆப்பிரிக்காவுக்குச் சென்றார். இவரைப்பற்றிய செய்தி பல ஆண்டுகள் வரையில் இங்கிலாந்துக்கு எட்டவில்லை. 1869-ஆம் ஆண்டு, **ச்டான்லி** என்பவர் லிவிங்ச்தனைக் கண்டு பிடிக்கச் சென்றார். அவர் பல இடங்களிலும் அலைந்து **தங்கனியாகா** ஏரியின் அருகேயுள்ள **உச்சி** என்ற ஊரில் அவரைக் கண்டார். ச்டான்லி லிவிங்ச்தனை இங்கிலாந்துக்கு வரும்படி அழைத்தார். ஆனால், லிவிங்ச்தன் தாம் புதிய இடங்களைக் கண்டுபிடிக்கப் போவதாகக் கூறி அவருடன் வர மறுத்துவிட்டார்; பின்பு **நைல் நதி** தோன்றுமிடத்தைக் காணப் புறப்பட்டார்; வழியில் உடல் நலங்குன்றி, **பங்குவேலோ** ஏரியின் கரையிலுள்ள **லாலா** என்ற ஊரில் உயிர் நீத்தார்.

7. இவருடைய எலும்புகளை இங்கிலாந்துக்குக் கொண்டுவந்து **வெச்டுமினிச்டர் ஆபே** என்ற கோயிலில் அடக்கஞ்செய்தனர். இவரது முயற்சியால் ஆப்பிரிக்காவைப் பற்றிய செய்திகள்

உலகிற்கு நன்கு தெரியவந்தன. அங்குச் செல்லு-தற்குரிய வழிகளைக் கண்டு அதன் இருளைப் போக்கிய பெரியாரின் புகழுடம்பு இன்றும் மக்க-ளிடையே நிலவுகின்றது.

### சொற்பொருள் விளக்கம் :

புதுமைகள் - புதிய பொருள்கள், வியத்தகு - ஆச்சரியப் படத்தக்க, ஆற்றல் - வல்லமை, ஈட்ட - சம்பாதிக்க, ஆர்வம் - மிக்க ஆசை, ஊதியம் - சம்பளம், குழு - கூட்டம் (சங்கம்), விழைந்தார்-விரும்பினர், விந்தை-புதுமை, குன்றி-குறைந்து.

### பயிற்சி :

1. எதிர்ச்சொற்கள் எழுது :—அரிய, சிற்றூர், மேடு, இறங்கு, நாகரிகம், புதிய.

2. கீழ்க்காணும் சொற்றொடர்களை வாக்கியங்களில் அமைத்தெழுது :—

வளரவளர, பல்வேறு, மனத்துணிவு, மருத்துவக்கலை.

3. பிரித்தெழுது:—பற்பல, நன்குணர்ந்து, இப்பெரியார், சிற்றூர், சிற்றன்னை.

### வினாக்கள் :

1. ஆற்றல் மிக்க அரிய செயல்கள் யாவை ?
2. லிவிங்சதன் பிறப்பிடம் எது ?
3. இவர் கல்வி கற்ற விதம் என்ன ?
4. இவர் ஆப்பிரிக்காவுக்குச் செல்லக் காரணம் என்ன ?
5. ஆப்பிரிக்கா 'இருண்ட கண்டம்' என வழங்கப்-பட்டதற்குக் காரணம் யாது ?
6. மாபோட்சா என்னுமிடத்தில் லிவிங்சதன் அடைந்த துன்பம் யாது?
7. இவர் கண்டு பிடித்த புதிய ஏரிகள் யாவை ?
8. இவர் கண்ட நீர்வீழ்ச்சி எது ?
9. ஆப்பிரிக்காவிற்கு இவரைத்தேடச் சென்றவர் யாவர் ?
10. இவர் எங்கே இறந்தார் ?

**கட்டுரையாக்கப் பயிற்சி :**

'ஆப்பிரிக்காக் கண்டமும் லிவிங்ச்தனும்' என்பதைப் பற்றி ஒரு கட்டுரை எழுது.

**இலக்கணம் :**

நானும் நீயும் பள்ளிக்கூடம் சென்றனம்.
நானும் நீயும் பந்து அடிப்பாம்.
நானும் நீயும் பாடங்கள் படிப்போம்.

நானும் நீயும் என்ற தன்மைப் பெயரும் முன்னிலைப்-பெயரும் சேர்ந்து வருமிடத்து, 'அம் ஆம், ஓம், என்ற விகுதிகளைக் கொண்டுள்ள வினைமுற்றுக்களைப் பெற்று வரும்.

இவற்றுள் 'ஓம்' என்ற விகுதி தன்மை முன்னிலை, படர்க்கை மூன்றும் சேர்ந்து வருமிடத்தும் வரும்.

உ-ம். நானும் நீயும் அவனும் விளையாடப் போவோம்.

# 10. மேட்டூர் அணை

1. 'சோழ வளநாடு சோறுடைத்து,' என்ற முதுமொழியாற் சிறப்பிக்கப்படுவது பொன்னி நாடு. இப்பொன்னி நாடு பொன்னியாற்றின் பெயரையே பெற்று விளங்குகின்றது. பொன்னி என்பது காவிரி ஆற்றின் மறு பெயர். காவிரி நதி



பாயும் நாடு காவிரி நாடு எனவும் வழங்கப்படும். இந்நாட்டை இந்நதியின் பெயரால் வழங்கக் காரணமென்ன? 'வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரி' இந்நாட்டைத் தென்னாட்டின் நெற்களஞ்சியமாய்த் திகழச்செய்து, நாட்டின் செல்வத்தைப் பெருக்குகின்றது; நாட்டின் கைத்தொழிலும் பயிர்த்தொழிலும் நன்கு நடைபெறக் காரணமாகின்றது. ஆயினும், சிற்சில ஆண்டு-

களில் உயிர் நாடியாய் விளங்கும் இந்நதி, நீர்ப் பெருக்கெடுத்து தன் இரு மருங்கு முள்ள வயல்களையும், சோலைகளையும், ஊர்களையும் அழித்துப் பெருஞ்சேதம் விளைக்கின்றது. இக்குறையொழிந்து பயிர்த்தொழில் சிறப்பாக நடைபெறுவதற்கு இந்நதியின் குறுக்கே பற்பல அணைகள் கட்டப்பட்டுள்ளன.

2. இவ்வணைகளுள் மிகப்பெரியது மேட்டூர் அணையேயாகும். இது மேட்டூருக்கருகில் அமைக்கப்பட்டுள்ளது. மேட்டூருக்கருகில் பல குன்றுகள் இருக்கின்றன. இவ்விடத்தில் காவிரியாறு ஆயிரத்து நூறடி அகலத்தில் இரு மலைகளுக்கிடையில் செல்வதனல், அவ்விரு மலைகளையும் எல்லைகளாக வைத்து, நடுவில் இவ்வணை கட்டப்பட்டுள்ளது. இங்கிருந்து 33 மைல் தூரத்தில் கெகைநக்கல் என்னும் இடத்தில் காவிரி நீர் எழுபதடி உயரத்திலிருந்து கீழேவிழுகிறது; அந்த வீழ்ச்சியிலிருந்து பதினைந்து மைல் தூரம் மலைப்பாறைகளுக்கு இடையே ஓடி வந்து, பிறகு திறந்த வெளியை அடைகிறது. இந்த அருவியிலிருந்து மேட்டூர் வரை ஓடி வரும் நீரைத் தேக்கும் வண்ணம் ஒரு பெரிய ஏரியை அமைத்து, மேட்டூரில் ஓர் அணையைக்கட்டி, இந்நீரைத் திட்டப்படி அளந்து விடுவது நலமாகும் என்று அரசாங்கத்தினர் தீர்மானித்தனர்.

3. சென்னைக் கவர்னராயிருந்த வைக்கவுண்டு கோசன் என்பவர், 1925-ஆம் ஆண்டு இதற்கு அத்திவாரமிட்டனர். பெரிய இயந்திரங்களினுதவியால் கருங்கற்பாறைகளை உடைத்துச் சிமிட்டிச் சுண்ணத்தைச் சேர்த்துச் செய்த அச்-

131328
சுக்களால் இது கட்டப்பட்டது. 1934-ஆம் ஆண்டு, அப்பொழுது கவர்னராயிருந்த சார்ச்பிரடெரிக்கு ச்டான்லி என்பவர், காவிரி மேட்டூர்ப் பாசன முறையைத் திறந்து வைத்தனர்.

4. இவ்வணை ஒரு மைல் இருபதடி நீளமுள்ளது. இதன் உயரம் ஆற்றுப் படுகையிலிருந்து நூற்று எழுபத்தாறடி. இதற்குக்கீழ் நாற்பதடி அத்திவாரம் போடப்பட்டுள்ளது. அதன் அகலம் நூற்று எழுபத்தோரடி. அணையின் மேற்பாகம் இருபதரையடி அகலமானது. இதனால் தேக்கப் படும் நீர், அறுபது சதுரமைல் பரப்புக்கொண்டது. தண்ணீரை வெளிவிடுவதற்குக் கடல் மட்டத்துக்கு எழுநூற்றெழுபது அடி உயரத்தில் பதினறு மதகுகளும், எட்டு மேல் மதகுகளும், அறுநூற்றெழுபதடி உயரத்தில் ஐந்து மதகுகளும் இருக்கின்றன.

5. இவ்வணையினல் பருவகாலங்களில் காவிரியில் ஓடிவரும் நீர்ப்பெருக்கினல் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மாவட்டங்களுக்கேற்படும் சேதம் தடுக்கப்பட்டுள்ளது. கடலில் வீணுகக் கலக்கும் நீர், பயிர்களுக்குப் பயன்படுகிறது. அன்றியும், வெள்ளம் குறைந்த காலத்தில் வயல்களெல்லாம் நீரின்றி வறண்டு நிற்கும். இக்குறை நீக்கப்பட்டு, ஆண்டு முழுவதும் குடியானவர் பயன் பெறுகின்றனர். பல புதிய கால்வாய்கள் வெட்டப்பட்டு, இதுகாறும் தரிசாய்க் கிடந்த பல இடங்களில் நெற்சாகுபடி நடைபெறுகின்றது. சுமார் மூன்றரை இலட்சம் ஏக்கர் நிலம் பயிர் செய்யப்பட்டு வருகின்றது.

6. இவ்வணையால் அரசாங்கத்துக்கு ஆண்டுதோறும் ஐம்பத்தைந்து இலட்சம் ரூபா வருமானம்

கிடைக்கின்றது. நாட்டில் உணவுப்பொருள்கள் மிகுதியாக விளைவிக்கப்படுகின்றன. இங்கு உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தினால் மேட்டூருக்கும் சென்னைக்கும் இடையேயுள்ள ஊர்களில் மின்சார விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன; மேட்டூர் என்ற சிற்றூர், பெரிய நகரமாய் விளங்குகின்றது; பற்பல கைத்தொழில்கள் நடைபெற வசதி ஏற்பட்டுள்ளது.

**சொற்பொருள் விளக்கம் :**

வளநாடு - செழிப்பான நாடு, உடைத்து - உடையது, பொன்னி - காவிரி, வான் பொய்ப்பினும் - மழை பெய்யாது போயினும், மருங்கு - பக்கம், தேக்குதல் - ஓரிடத்தில் தேங்கும்படி செய்தல், இதுகாறும் - இதுவரை, சாகுபடி செய்தல் - பயிர் செய்தல்.

**பயிற்சி :**

1. எதிர்ச்சொற்கள் எழுது :—தென்னாடு, பெருக்கு.
2. இருபொருள் கூறு :—உடைத்து, குன்று, ஆண்டு.
3. பிரித்தெழுது :—
   தென்னாடு—தெற்கு + நாடு.
   தென்றிசை, நூற்றெழுபது, எழுநூற்றெழுபது, அறுநூற்றெழுபது.

**வினாக்கள் :**

1. சோழநாடு எவ்வெப்பெயர்களால் வழங்கப்படுகிறது?
2. அதனைச் செழிக்கச் செய்யும் நதி யாது? அதனைச் சிறப்பிக்கும் சொற்றொடர் யாது?
3. மேட்டூர் அணை யாரால் திறந்து வைக்கப்பட்டது?
4. இவ்வணையால் நாட்டிற்கு ஏற்பட்டுள்ள நன்மைகள் யாவை?
5. மேட்டூர் அணையின் அமைப்பின் விளக்கம் யாது?
6. இவ்வணை கட்டப்பட வேண்டிய அவசியமென்ன?

7. இதனால் அரசாங்கத்துக்குக் கிடைக்கும் வருமானம் எவ்வளவு?

**கட்டுரையாக்கப் பயிற்சி:**

'காவிரியும் சோழ நாடும், மேட்டூரணையும் அதன் பயன்களும்' என்பவற்றைப் பற்றிக் கட்டுரை எழுது.

**இலக்கணம்:**

காவிரியாறு சோழநாட்டில் ஓடுகிறது.
காவிரியாறு சோழநாட்டில் பாய்கிறது.
காவிரியாறு சோழநாட்டில் நடக்கிறது.

இவற்றுள் ஆறு ஓடுகிறது, பாய்கிறது, என்பன பொருத்தமான சொற்கள். ஆனால், நடக்கிறது என்பது பொருத்தமான சொல்லன்று.

இது போன்று,

நீர் குடித்தான், சோறு உண்டான் என்பன பொருத்தமான சொற்கள். நீர் உண்டான், சோறு குடித்தான் என்பன பொருத்தமற்ற சொற்கள்.

ஆதலின், வாக்கியங்களில் இடத்துக்குப் பொருத்தமான சொற்களைத் தெரிந்து அமைத்து எழுதுதல் வேண்டும். இதுவே சொற்பொருத்தம் எனப்படும்.

# 11. அவிவேக பூரண குரு கதை

## குரு வாடகை மாடு ஏறிப்போனது

1. ஒர் ஊரில் அவிவேக பூரண குரு என்பவரும் அவருடைய சீடர்களும் வாழ்ந்து வந்தார்கள். ஒரு நாள் அவர்கள் தூரப்பயணம் போகும்படி அவசியமுண்டாயிற்று. சீடர்கள், "அவ்வளவு தூரம் நம்முடைய குரு கால் நடையாகப் போக முடியாது," என்று ஒரு மாட்டை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு வந்தார்கள். அதற்கு வாடகை நாளொன்றுக்கு மூன்று பணம் கொடுக்கத்



தீர்மானித்தார்கள். பல அலுவலினலே பொழுது விடிந்து ஒரு சாமம் கடந்த பின் குருவும் சீடர்களும் புறப்பட்டுப் போனர்கள். அக்காலம் கடுவேனிலென்னும் கோடைகாலமாகையால், அவர்கள் நடக்க நடக்கக் கொள்ளி கொண்டு சுடுகிறது போலச் சுள்ளுச்சுள்ளென வெயி-

லெறிக்க, மரம் மட்டை குளம் குட்டை, இல்லாமை-யால், உண்ண நீரும், ஒதுங்க நிழலும் கிடையாத வெட்டவெளியாகிய பாலை நிலத்தில் அகப்பட்டுக்-கொண்டார்கள். அப்படியே போகப் போக வெயி-லின் வெப்பம் பொருமல், பசிய இளங்கீரை போலக் கிழக்குரு துவண்டு கீழே விழத் தலைப்-பட்டார். அதைக் கண்ட சீடர்கள், "ஐயோ! குரு களைத்துவிட்டாரே!" என்று மாட்டை நிறுத்தி, அவரை இறக்கி, அவர் வெப்பத்தை ஆற்றுவதற்கு நிழல் எங்குமில்லாமையால் நிறுத்தப்பட்ட மாட்-டின் நிழலிலே தரையில் துணியை விரித்துப் போட்டு அவரைக் கிடத்தி, விசிறியில்லாததினுல் வத்திரத்திஞல் விசிறிக் கொண்டிருந்தார்கள். அவ-ருக்கு அதிலே கொஞ்சம் ஆறுதலான பிறகு, குளிர்ந்த காற்று வீச, மறுபடியும் அவரை மாட்டின்மேலேற்றி மெள்ள மெள்ள நடத்திக்-கொண்டு போய், பொழுது போகுமுன்னே ஒரு சிற்றூரிற் சென்று தங்கினுர்கள்.

2. அங்கே ஒரு சிறிய வீட்டின் நடையிற்-போயிருந்து, மாட்டுக்காரனுக்கு மூன்று பணம் கூலி கொடுத்தார்கள். அவன், "இது போதாது," என்ருன். "இஃதென்னே? முன் உன்னேடே பேசிச்சம்மதித்த நாட்கூலி மூன்றுபணந்தானே?" என்று அவர்கள் சொல்ல, அவன் மறுத்து, "மாடு வாகனமாய் ஏறிப் போவதற்காக உதவினதற்கு இந்தக் கூலி சரிதான்; பிறகு நடுவழியில் வெயி-லுக்குக் குடையாய் உதவினதற்குக் கூலி கொடுக்க வேண்டாவா?" என்று கூச்சல் போட, "இஃது அநியாயம்! அநியாயம்!!" என்று அவர்கள் கோ-பித்துப்பேச, அப்புறம் மாட்டுக்காரனுக்கும் அவர்-

களுக்கும் சண்டையாகிப் பெரிய ஆரவாரம் உண்டானதால், அதை ஊரார் அறிந்து, ஆடவர், பெண்டிர், பெரியவர், சிறியவர் எல்லாரும் அங்குக் கூடினர். அவர்களுள் நியாயக்காரனொருவன் கூட்டத்தை விலக்கிவந்து, கூச்சலை அடக்கி, இரு திறத்தார் வழக்கையும் விசாரித்து, "நல்லது; நான் சொல்லுகின்ற தீர்ப்புக்குச் சம்மதிப்பீர்களோ?" என்று கேட்டுப் பின் சொல்லத் தொடங்கினான் :

3. "நான் சிலநாட்களுக்கு முன் தூரதேசத்துக்குப் பிரயாணமாய்ப் போகையில் நடுவழியிலே ஓர் இராத்திரி ஓரூரில் ஒரு பெரிய விடுதியில் தங்கினேன்; அங்கே வந்தவர்களுக்கெல்லாம் வசிக்கும் இடம் குடிக்கூலிக்கு விடுவதுமின்றிச் சாப்பிடுகிறதற்கு வேண்டிய சோறு, கறி முதலியவைகளும் கிரயத்துக்குக் கொடுப்பார்கள்; ஆகையால், "உனக்கு ஏதாவது வேண்டுமா?" என்று அவர்கள் என்னைக் கேட்டபொழுது, எனக்குச் செலவுக்குப் பணமின்மையால், 'நான் கட்டுச்சோறு கட்டிக்கொண்டு வந்திருக்கிறேன்; வேறொன்றும் தேவையில்லை,' என்றேன்; அத்தருணத்தில் அங்கு வந்த மற்றவர்களுக்காக ஆட்டிறைச்சியை நெருப்பில் வேக வைத்துக்கொண்டிருந்தனர். அதினின்றெழுந்த வாசனையை மோந்துகொண்டே இன்பமாய்ச் சாப்பிட்டேன். பிறகு அங்கிருந்து போக முயல்கையில் விடுதிக்காரன் கறியின் வாசனை மோந்ததற்காகக் கூலி கேட்டான். நான், 'அதற்கேது கூலி?' என்றேன். அவன் 'கொடுத்தாக வேண்டும்,' என்றான்; நான், 'கொடுக்கிறதில்லை,' என்று எழுந்து நடந்தேன். அவன், 'நீ கொடாமல் போகக்கூடாது,' என்று ஆணை-

யிட்டுத் தடுத்தான். இந்தப்படி இருவரும் வழக்கிட்டு, அந்த ஊர் அதிகாரியிடம் சென்ருேம்.

4, "ஊர் அதிகாரியோ, பூரண பண்டிதன்; சகல சாத்திர நிபுணன்; அதிக புத்திமான்; மகா சமர்த்தன்; மிகவும் நியாய சூட்சுமம் தெரிந்தவன். அந்த மகானுபாவன் பண்ணின நியாயத்தீர்ப்பைக் கேளுங்கள்: 'கறி தின்றதற்கு விலை பணமும், கறி மணம் மோந்ததற்கு விலை பணத்தின் மணமுமாகும்; இதுதான் தீர்ப்பு,' என்று கூறி, விடுதிக்காரனை அருகே அழைத்துப் பணம் நிறைந்த பையை எடுத்து அவன் மூக்கிலே அழுந்த உரைத்துத் தேய்த்தான். அவனும் 'மூக்குப் போயிற்று! ஐயோ! மூக்குப் போயிற்று! இந்த மட்டில் வந்த கூலி போதும்! போதும்!' என்ருன். கேட்டீர்களா? இதுவே நல்ல நியாயமும் உத்தம நீதியுமல்லவா? இந்தத் தீர்ப்பே உங்களுக்கும் உரியது? எப்படியென்ருல், மாடேறி வந்ததற்குக் கூலி பணமும்; மாட்டின் நிழலிலிருந்ததற்குக் கூலி பணத்தின் நிழலுமாகும்; ஆகிலும், மாட்டு நிழற்கூலிக்கு இப்போது அத்தமித்ததனுல் பண நிழல் அகப்படாது; அதற்குப் பதிலாகப் பணச்சத்தத்தை ஒத்துக்கொள்ளட்டும்," என்று சொல்லி, மாட்டுக்காரனைச் சிக்கெனப் பிடித்துப் பணப்பையைத் தூக்கி அவன் காதிலே உரமாகத் தாக்கும்படி அதனுல் மோதியடித்துப் 'பணச்சத்தங் கேட்டாயா?' என்ருன். அவனும், 'ஆமையா, ஆமையா, கேட்டேன்! கேட்டேன்! காது நோகிறது! போதும் கூலி! போதும் அப்பா! உனக்குப் புண்ணியமாய்ப் போகிறது! என்னை விட்டுவிடு!' என்ருன்.

5. அந்தச் சமயத்தில் குருவும் அவனைப்

பார்த்து, "உன் மாடும் எனக்குப் போதும்; இந்தச் சஞ்சலம் இனி ஆகாது; நீ மாட்டை ஓட்டிக்கொண்டு போ. இன்னும் சிறிது தூரந்தான் பயணம் போக வேண்டும். காலையில் மெள்ள நடந்து போகிறேன்," என்று அவனைப் போகச் சொல்லிப் பின்பு நியாயக்காரனைப் பார்த்து, "ஐயா, நீர் எங்கள் வழக்கைப் பாரபட்சமில்லாமல் எள்ளுக்காய் பிளந்தாற்போலச் சரியாகத் தீர்த்தீர்," என்று புகழ்ந்து ஆசீர்வதித்து அனுப்பினர்.

### சொற்பொருள் விளக்கம் :

அவிவேகம்-அறிவின்மை, கால்நடை-நடந்து செல்லுதல், வெப்பம் - சூடு, ஆரவாரம் - பெருஞ்சத்தம், சந்தடி - கூச்சல், பூரணபண்டிதன் - முழுவதும் கற்றவன், நிபுணன் - கரை கண்டவன், சூட்சுமம் - இரகசியம், மகானுபாவன் - அனுபவ முதிர்ச்சி பெற்றவன், சிக்கென - கெட்டியாக, சஞ்சலம் - துன்பம், பாரபட்சம் - ஒருவர் பக்கம் சார்தல்.

### பயிற்சி :

1. எதிர்ச்சொற்கள் எழுது :—கோடைகாலம், வெப்பம், நியாயம், அத்தமித்தல்.

2. சொற்களின் பொருள் வேறுபாட்டை எழுது :—கரி, கறி ; உரை, உறை ; கூலி, கூளி.

3. பிரித்தெழுது :—நாட்பயணம், நாட்கூலி, இளங்காளை, இளங்கீரை.

### வினாக்கள் :

1. குருவின் சீடர்கள் எதனை வாடகைக்கு அமர்த்தினர்கள் ?

2. வழியில் குருவுக்கு நேர்ந்தது என்ன ?

3. மாட்டுக்காரன் அவர்களுடன் சண்டையிடக் காரணம் என்ன ?

4. நியாயக்காரன் சொன்ன வரலாறு யாது ?

5. மாட்டுக்காரனுக்கு எவ்வாறு நீதி வழங்கப்பட்டது?
6. குரு நியாயக்காரனை எவ்வாறு புகழ்ந்தார்?

### கட்டுரையாக்கப் பயிற்சி:

'குரு மாடேறிப் போய் அடைந்த துன்பம்; நியாயக்காரனும் மாட்டுக்காரனும்'—இவற்றைப் பற்றிக் கட்டுரை எழுது.

### இலக்கணம்:

#### நிறுத்தக் குறிகள்:

1. சீடர்கள் வாடகைக்கு மாடு அமர்த்திக்கொண்டு வந்தார்கள்.

2. அவன் பூரண பண்டிதன்; சகல சாத்திர நிபுணன்; அதிக புத்திமான்; மகா சமர்த்தன்.

3. ஆடவர், பெண்டிர், பெரியோர், சிறியவர் எல்லாரும் அங்கே கூடினர்.

4. உங்கள் சம்மதி என்ன?

5. அவன், "நீ கொடாமல் போகக்கூடாது," என்றான்.

6. ஐயோ! குரு களைத்துவிட்டாரே!

இவ்வாக்கியங்களைக் கவனி.

(1) ஒரு வாக்கியம் முடிந்துவிட்டதைக் காட்ட (.) முற்றுப் புள்ளி இடவேண்டும்.

(2) ஓர் எழுவாய் பல வினைமுற்றுக்களைக் கொண்டு முடியும் போது ஒவ்வொரு வினைமுற்றின் பின்னும் (;) அரைப் புள்ளி இடவேண்டும்.

(3) பல பொருள்கள் அடுக்கி வரும் போது, சொற்களைத் தனித்தனியே பிரித்துக் காட்ட (,) காற்புள்ளி இடவேண்டும்.

(4) கேள்வி வாக்கியத்தின் கடைசியில் (?) வினாக்குறி இடவேண்டும்.

(5) ஒருவர் கூறியதை அவ்வாறே எடுத்துக் கூறும்போது (" ") மேற்கோட்குறி இடவேண்டும்.

(6) வியப்பு, இரக்கம், கோபம் முதலிய உணர்ச்சிகளைக் காட்ட விரும்பும்போது (!) உணர்ச்சிக்குறி இடவேண்டும்.

## 12. இயேசுவின் இன்னுரைகள்

1. மனத்தாழ்மை உள்ளவர்கள் பேறு பெற்றவர்கள். அவர்கள் மறுமைப் பயனைப் பெறுவார்கள்.

2. உன் முழு மனத்துடனும் வன்மையுடனும் கடவுளிடம் அன்பு வை; இதுவே கடவுளின் முதற்கட்டளை.

3. உன்னில் நீ அன்பு கூர்வது போன்று பிறன் மீதும் அன்பு கூர். இஃது கடவுளின் இரண்டாம் கட்டளை.

4. இரக்கமுள்ளவன் பேறு பெற்றவன். அவன் இரக்கம் பெறுவான்.

5. ஒருவன் உன்னை வலக்கன்னத்தில் அடித்தால், அவனுக்கு உன் இடக்கன்னத்தையும் காட்டு.

6. உங்கள் பகைவர்களையும் சினேகியுங்கள்: அவர்களுக்கு நன்மை செய்யுங்கள். உங்களை இழித்துக்கூறி, உங்களுக்குத் துன்பம் செய்கிறவர்களுக்காகக் கடவுளிடம் விண்ணப்பம் செய்யுங்கள்.

7. பிறர் உன்னைப் புகழ வேண்டுமென எண்ணி அறம் செய்யாதே. உனது வலக்கை செய்யும் உதவியை இடக்கை அறியவேண்டா.

8. 'கடவுளே, கடவுளே,' என்று பலகாலும் சொல்லுபவன் மறுமை இன்பம் பெறுன்; கடவுளின் கட்டளைப்படி ஒழுகுபவனே வீட்டுலகை அடைவான்.

9. பிறருடைய குற்றங்களை நீங்கள் மறவாதிருந்தால், உங்கள் குற்றங்களும் உங்களுக்கு மன்னிக்கப்பட மாட்டா.

10. நீ உன்னைக் கேட்கிறவனுக்குக் கொடு; உன்னைக் கடன் கேட்பவனுக்கு மனமாரக் கொடு.

11. பிறர் உங்களை எவ்வாறு நடத்த வேண்டுமென நீங்கள் விரும்புகிறீர்களோ, அவ்வாறே நீங்கள் பிறரை நடத்துங்கள்.

### சொற்பொருள் விளக்கம்:

பேறு - செல்வம், மறுமைப்பயன் - மோட்சம், பலகாலும் - பல தடவையும், பெருன் - பெற மாட்டான்.

### பயிற்சி:

எதிர்ச்சொற்கள் எழுது :—

மறுமை, பெறுவான், பகைவன், அறம்.

### வினுக்கள்:

1. மறுமைப் பயன் பெறுபவர் யாவர்?
2. கடவுளின் முதற்கட்டளை யாது?
3. 'வலக்கன்னத்தில் அடித்தால் இடக்கன்னத்தைக் காட்டு.'—இதன் கருத்து என்ன?
4. நன்மை எவருக்குச் செய்ய வேண்டும்?
5. நாம் யாருக்காகக் கடவுளிடம் விண்ணப்பம் செய்ய வேண்டும்?
6. அறம் எவ்வாறு செய்யப்படுதல் வேண்டும்?
7. வீட்டுலகு அடைபவன் யாவன்?
8. யாருக்குக் குற்றங்கள் மன்னிக்கப்படா?
9. பிறரை நடத்த வேண்டிய முறை யாது?

### இலக்கணம்:

அவன் அறிவு பெறுவான்.

அவன் அறிவு பெற்றுல் சிறப்புறுவான்.

அவன் அறிவு பெற்ற வள்ளல்.

இச்சொற்றொடர்களுள், 'பெற்றான்' என்ற வினைச்சொல் பொருள் முடிந்து நிற்கின்றது. இது **வினைமுற்று.** 'பெற்றால்' என்ற வினைச்சொல் பொருள் முடிவு பெறாது, பிறிதொரு சொல்லைக்கொண்டு முடிவு பெற வேண்டிய சொல்லாகும்; ஆதலின், **எச்சச்சொல்** ஆகும். அது, '**சிறப்புறுவான்**' என்ற வினைச் சொல்லைக்கொண்டு முடிவதால், **வினையெச்சம்** எனப்படும். '**பெற்ற**' என்ற வினைச்சொல் '**வள்ளல்**' என்னும் பெயர்ச்சொல்லைக்கொண்டு முடிவதால், **பெயரெச்சம்** எனப்படும்.

கீழ் வரும் வினைமுற்றுக்களைப் பெயரெச்ச வினையெச்சங்களாக மாற்று:—

| | | |
|---|---|---|
| ஓடினான் | ஓடின, | ஓடி. |
| தேடினான் | ———, | ——— |
| வந்தான் | ———, | ——— |
| கண்டான் | ———, | ——— |

# 13. கிராமக் கைத்தொழில்

1. பண்டைத் தமிழ் நாடு, கலைகள் பலவும் ஓங்கிய நாடு; கல்வி நிறைந்த நாடு; கைத்தொழில் மலிந்த நாடு; பல்வளமும் நிறைந்த நாடு,' எனப் புலவர் போற்றுதற்குரிய நாடாய்த் திகழ்ந்தது. நூல் நூற்றல், ஆடை நெய்தல், எண்ணெய் ஆட்டுதல், கூடை முடைதல், சர்க்கரை செய்தல், உழவுக் கருவிகள் செய்தல், பொன், வெள்ளி, செம்பு, பித்தளை, வெண்கலம் இவற்ருல் பாத்திரங்களும் பிறவும் செய்தல், கயிறு திரித்தல், மட்பாண்டம் வனைதல் முதலிய பற்பல கைத்தொழில்களும் கிராமங்களில் நடைபெற்றன; இன்றும் நடைபெறுகின்றன. இப்பாடத்தில் தென்னை, கரும்பு என்பனவற்றைக் கொண்டு நடைபெறும் கைத்தொழில்களைக் கவனிப்போம் :

2. தென்னை மரம் ஐம்பது அடி முதல் எழுபதடி உயரம் வரை வளரும்; அது கிளைகளில்லாத மரம்; அதன் உச்சியில் மட்டைகள் இருக்கும்; உச்சியில் குலை குலையாய்த் தேங்காய் காய்த்துத் தொங்கும்; சில மரங்களில் இருநூறு காய்களும் காணப்படும். தென்னை மரம் ஐந்தாம் ஆண்டு முதல் காய்க்கத் தொடங்கும். முதிராத தேங்காய் இளநீர் எனப்படும். அதன் உள்ளிருக்கும் நீர் மிகவும் இனிமையாயிருக்கும். கோடை காலத்தில் மக்கள் அதனை விருப்பத்துடன் குடிப்பார்கள். இதனுற்ருன், ஔவையார் 'தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத் தலையாலே தான் தரும்,' என்ருர்.

3. தேங்காய் சிறந்த உணவுப் பொருள். முதிர்ந்த தேங்காய் சமையலுக்கும், தின்பண்டங்கள் செய்யவும் பயன்படும். முதிர்ந்து நீர் வற்றிய

தேங்காய்ப் பருப்பைக் கொப்பரை என்பார்கள். கொப்பரையைச் செக்கிலிட்டு ஆட்டி எண்ணெய் எடுக்கலாம். தேங்காய் நெய் விளக்கு எரிக்கவும், தலையில் தேய்த்துக் குளிக்கவும், பண்டங்கள் செய்யவும் உதவும். இதனுல் சோப்பு, மெழுகுவர்த்தி முதலியவை செய்கின்றனர்.

4. கிராம மக்கள் தென்னை ஓலைகளைக் கீற்றுக்களாக முடைந்து, வீட்டுக்குக் கூரை வேய்கின்ருர்கள்; தென்னை ஓலைகளைத் தடுக்குகளாகவும் கூடைகளாகவும் முடைகின்ருர்கள்; தேங்காய் ஓடு சிரட்டை எனவும் கொட்டாங்கச்சி எனவும் வழங்கப்படும். இதனுல் அகப்பைகள், கிண்ணங்கள், குடுக்கைகள் முதலியன செய்யப்படுகின்றன. ஓலைகளின் நடுவிலுள்ள ஈர்க்குகளினுல் துடைப்பம் செய்யப்படுகின்றது. தென்னை மரம் வீடுகளுக்கு விட்டங்களாகவும், சிற்ருறுகளின் குறுக்கே பாலமாகவும் பயன்படுகின்றது.

5. தேங்காய் ஓடுகளின் மேலுள்ள நார்ப்பகுதி சவுரி எனப்படும். இச்சவுரியே மிதிபாய், கயிறு முதலியன செய்யப்பயன்படுகிறது. திருவிதாங்கூர் மக்கள் பெரும்பாலும் கயிறு திரித்தலாகிய கைத்தொழிலையே செய்து வருகின்ருர்கள். தேங்காய்ச் சவுரியை உப்பங்கழிகளாகிய காயல்களில் பல நாட்கள் ஊறவைத்து, நன்ருய் ஊறிய பின் அதனை வெளியே எடுத்து, நார் நாராகப் பிரிக்கின்ருர்கள். இந்நாரே பல விதப் பொருள்கள் செய்ய உதவுகின்றது. மிதிபாய் முதலியன செய்வதற்குப் பெரிய தொழிற்சாலைகள் அந்நாட்டில் உள்ளன. கயிறு திரித்தலாகிய கைத்தொழிலை யாவரும் எளிதிற்செய்கின்றனர்.

6. கயிறு திரிப்பது எப்படி? இரண்டு மரக்கழிகளை எடுத்துக்கொண்டு, அவற்றின் நுனிப் பக்கத்தில் இரு துளைகள் செய்துகொள்ள வேண்டும். ஒரு கழியை மற்றக் கழியுடன் இணைத்துக்கொள்ள வேண்டும். அக்கழியின் நடுப்பாகத்தில் மற்றொரு துளை இருக்க வேண்டும். ஒரு சாண் நீளத்திற்குச் சவுரி நாரைத் திரித்து, அத்துளையினுள் செலுத்த வேண்டும். ஒருவன் அக்கழியைச் சுற்றிக்கொண்டே பின் நோக்கிச் செல்ல வேண்டும். மற்றொருவன் சவுரி நாரை முன்னர்த் திரித்த கயிற்றுடன் சேர்த்துக்கொண்டேயிருக்க வேண்டும். கழி சுழலச் சுழலக் கயிறு முறுக்கேறும். கயிற்றின் பருமனுக்கு ஏற்பக் கழியிலுள்ள துளை அமைய வேண்டும். தேவைக்கு ஏற்பக் கயிற்றின் நீளம் மிகுதியாக, நார் மிகுதியாக வைத்துக்கொள்ளுதல் வேண்டும். இதுவே கயிறு திரித்தல் தொழிலாகும்.

7. சர்க்கரை செய்யும் தொழில் சிறந்த கிராமத் தொழிலாய் இருக்கின்றது. சர்க்கரை கருப்பஞ்சாற்றிலிருந்து செய்யப்படுகின்றது. கரும்பு நீர் வளம் நிறைந்த தோட்டங்களிலும் வயல்களிலும் செழித்து வளரும். இது மூங்கில் இனத்தைச் சேர்ந்தது. இஃது ஆறடி முதல் பன்னிரண்டடி உயரம் வரை வளரும். இதனை **வேழம் கன்னல்** என நூல்கள் கூறும்.

8. கரும்பைக் கணுக்களோடு கூடிய சிறு துண்டுகளாக வெட்டி, பண்படுத்தப்பட்ட நிலத்தில் நட்டு, நீர் பாய்ச்சுவர். வெளியிலுள்ள கணுக்களிலிருந்து தளிர்கள் தோன்றும். மண்ணில் நடப்பட்டு மறைந்துள்ள கணுக்களினின்றும் சிம்புகள் தோன்றும். இலைகள் நீண்டு, கூர்மையாயும் சுர-

சுரப்பாயுமிருக்கும். இந்த இலைகளுக்குத் தோகை என்பது பெயர். கரும்பு வளர வளரக் குடியானவர்-கள் அதன் தோகைகளைக் கழித்துவிடுவார்கள். கரும்பின் நுனிப்பாகத்துக்குக் கொழுந்தாடை என்பது பெயர். கருப்பங்கழிகள் நன்கு முற்றிய பின் அவற்றை வெட்டி, அவற்றின் தோகைகளைப் போக்கி, கட்டுகளாகக் கட்டி, ஆலைக்குக்கொண்டு செல்வார்கள்.

9. கரும்பாலைகளில் கரும்பினின்றும் சாறு பிழிதற்கு இரண்டு உருளைகள் பொருத்தப்பட்-



டிருக்கும். கரும்பாலையில் கட்டப்பட்டுள்ள மாடு-கள் சுற்றி வரும்போது இவ்வுருளைகள் சுழலும். கருப்பங்கழிகளைத் துண்டு துண்டாக வெட்டி, இவற்றிடையே செலுத்துவர். அவை நன்ருக நசுக்-கப்பட்டு, சாறு ஒரு பக்கத்திலுள்ள தொட்டியில் விழும்; சக்கை மற்றொரு பக்கத்தில் விழும். இந்தச்

சக்கை அடுப்பெரிக்க உதவும். சாற்றை வடிகட்டிச் சுண்ணும்பையும் வேறு சில பொருள்களையும் சேர்த்துக் கலக்கித் தெளிய வைப்பர். பின்னர்த் தெளிந்த சாற்றைப் பெரிய கொப்பரைகளில் ஊற்றிக் காய்ச்சுவர். சாறு வற்றிப் பளிங்குக் கட்டிபோலாகும். இந்தக் கட்டிகளையே உடைத்துச் சர்க்கரை செய்வார்கள். இது **பழுப்புச்சர்க்கரை** எனப்படும். இச்சர்க்கரையை நீரிற்கலந்து சில பொருள்களையும் சேர்த்து எலும்புத்தூளில் ஊற்றி வடிகட்டிக் காய்ச்சுவர். நீர் வற்றிய சாற்றைப் பதம் பார்த்து இறக்குவர் இதுவே **வெள்ளைச் சர்க்கரையாகும்.**

10. கிராமக் கைத்தொழில்கள் மக்களின் வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்களை உற்பத்தி செய்வதற்காகவே ஏற்பட்டுள்ளன. இந்தத் தொழில்களைச் செய்வதனுல், மக்கள் தங்கள் வாழ்க்கைக்கு வேண்டும் பொருள்களைப் பெற்று வாழ்கின்றுர்கள். மாணவர்கள் ஏட்டுக் கல்வியுடன் தொழிற்கல்வியும் கற்றுல், நாடு முன்னேற்றமடையும். ஆதலின், ஒவ்வொரு பள்ளியிலும் கைத்தொழில் ஒன்று கற்பிக்கப்படுகின்றது. செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள **வாலாசாபாது இந்துமதப் பாடசாலையில்** நூல் நூற்றல், துணி நெய்தல், துணி தைத்தல், ஈயம் செய்தல், பொத்தான் செய்தல், மாட்டுக் கொம்புகளிலிருந்து பல வகைப் பொருள்கள் செய்தல், கோரையைக் கொண்டு பாய் நெய்தல், அச்சுத் தொழில் முதலியன கற்பிக்கப்படுகின்றன. மாணவர் இத்தொழில்களை மிக்க மகிழ்ச்சியுடன் செய்து வருகின்றனர். நாட்டில் மாணவர்களின் தகுதிக்கேற்ப யாதேனும் ஒரு

கைத்தொழில் கற்பிக்கப்படுமாயின், அவர்கள் தங்கள் பிற்கால வாழ்க்கையிற் சிறப்புறுவார்கள்.

**சொற்பொருள் விளக்கம் :**

மலிந்த - பெருகிய, தாள் - வேர், இணைத்து - சேர்த்து, பளிங்கு - கண்ணாடி, பதம்-பக்குவம், ஏட்டுக் கல்வி-நூற்கல்வி.

**பயிற்சி :**

1. குலை குலையாய், வளர வளர, சுழலச்சுழல—இச்சொற்றொடர்களை வாக்கியங்களில் அமைத்தெழுது.

2. **பிரித்தெழுது** :—மட்பாண்டம், இதனாற்றான், கருப்பங்கழி, மற்றோர்.

**வினாக்கள் :**

1. கிராமங்களில் நடைபெறும் தொழில்கள் யாவை ?
2. தென்னை மரத்துக்கும் பிற மரங்களுக்குமுள்ள வேறுபாடு என்ன ?
3. தென்னைமரம் தாளுண்ட நீரை எவ்வாறு தருகின்றது?
4. தேங்காய் எவ்வாறு பயன்படுகின்றது ?
5. தென்னை மரத்தால் மக்கள் அடையும் பயன்கள் எவை?
6. சவுரியைக் கயிருகத் திரிக்கும் முறை யாது ?
7. கரும்பு பயிரிடும் முறை யாது ?
8. கரும்பிலிருந்து சர்க்கரை செய்யும் விதம் யாது ?
9. கைத்தொழில் கற்பதனால் ஏற்படும் நன்மை என்ன ?

**கட்டுரையாக்கப் பயிற்சி :**

தென்னைமரமும் அதன் பயனும், கயிறு திரித்தல், சர்க்கரை செய்தல்—இவற்றைப் பற்றிக் கட்டுரை எழுது.

**இலக்கணம் :**

சுகுமாரன் **கண்டான்.** சுகுமாரன் **காண்பான்**
சுகுமாரன் **காண்கிறான்.**

முதல் வாக்கியத்திலுள்ள வினைமுற்று, தொழில் நடந்த காலத்தைத் தெரிவிக்கின்றது. இது இறந்த கால வினைமுற்று.

இரண்டாவது வாக்கியத்திலுள்ள வினைமுற்று தொழில் நடைபெறுகின்ற காலத்தைத் தெரிவிக்கின்றது. இது **நிகழ்கால வினை முற்று.**

மூன்றாவது வாக்கியத்திலுள்ள வினைமுற்று, தொழில் இனி நடக்கப் போவதைத் தெரிவிக்கின்றது. இது எதிர்கால வினைமுற்று.

**ஆகவே, வினைமுற்று இறந்த கால வினைமுற்று, நிகழ்கால வினை முற்று, எதிர் கால வினை முற்று என மூன்று வகைப்படும்.**

# 14. ஔவையார் வாழ்க்கை நிகழ்ச்சிகள்

## காட்சி-1

| |
|---|
| **இடம் :** குறவன் மனை. |
| **பாத்திரங்கள் :** குறவன், அவன் மனைவியர் இருவர், ஔவையார். |

**குறவன் :** பெண்களே, யான் அழகர் மலைக்குப் போகிறேன். யான் இல்லாத சமயத்தில் நீங்கள் ஒற்றுமையாய் வீட்டுக் காரியங்களைக் கவனித்துக்கொள்ள வேண்டும்.

**இளையாள் :** நீங்கள் என்னைப் பிரிந்து செல்ல எண்ணுகின்றீர்களே ! நீங்கள் இருக்கும் பொழுதே இவள் என்னை நிந்தித்துக்கொண்டிருக்கின்றாள். நீங்கள் போய்விட்டால், என் நிலைமை யாதாகும் ?

**மூத்தவள் :** அடீ, என்னைப் பற்றிக் குறை கூறுவதே உன் வேலையாகிவிட்டது ! நீங்கள் இருவரும் சேர்ந்து என்னைப் படாதபாடு படுத்துகின்றீர்களே ! அது போதாதா ! நான் உன்னை நிந்திக்கின்றேன் என்கின்றாயே !

**குறவன் :** (மூத்தவளைப் பார்த்து) நீ வயதிற்பெரியவள் ; இவள் என்ன சொன்னாலும், மனத்திற்கொள்ளாதே ! தாய் போல இவளைக் கவனித்துக்கொள்.

**இளையவள் :** அவள் என் தாய் போல என்னை அன்பால் அணைக்க வேண்டா. அவரவர் செய்ய வேண்டிய வேலையைக் குறிப்பிட்டுச் சொல்லிவிடுங்கள்.

**மூத்தவள் :** அதுவே சரி, நான் இவள் வழிக்கே போகவில்லை. நான் என்ன செய்ய வேண்டுமென்று கூறிச் செல்லுங்கள்.

**குறவன் :** நல்லது. நல்லாள், நீ வெளிவேலைகளைக் கவனித்துக்கொள். தினைப்புனக் காவல் உன்னுடையது; வீட்டுக்கு வேண்டிய விறகு நீதான் கொணர வேண்டும்; கிழங்கு அகழ்ந்து, தினைமா இடித்து, தேன் எடுத்து வந்து 'உன் சகக்களத்தியிடம் கொடுக்கவேண்டுவது உன் பொறுப்பு.

**இளையாள் :** நம் கொல்லைப்புறம் இருக்கும் பலாவைக் கவனிப்பது யார் வேலை? தினைப்புனக் காவல் என்று அவள் இரவு பகல் அங்கேயே தங்கிவிடுவாள். நான் என்ன செய்ய முடியும்?

**குறவன் :** பூங்காவனம், நீ ஏன் கலங்குகின்றாய்! நல்லாள் அதனைப் பாதுகாத்துக்கொள்வாள். அதுவும் அவள் வேலைகளுள் ஒன்றுதான். நீ குடிசையை விட்டு வெளியே செல்ல வேண்டா.

(இருவரிடமும் விடைபெற்றுச் செல்கிறான்.)

**இளையாள் :** (தனக்குள்ளே) இதுதான் நான் எதிர் பார்த்த சமயம். கணவன் வருமுன் பலா மரத்தை வெட்டி, அவள்மீது பழி சுமத்துகிறேன்!

(மூத்தவள் வெளியே சென்றிருக்கும் போது இளையாள் பலாவை வெட்டிவிடுகிறாள்.)

**மூத்தவள் :** (வீடு திரும்பி, வெட்டப்பட்ட பலாவைப் பார்த்து) ஐயோ! மோசம் போனேனே! பாதகி பலாவை வெட்டிவிட்டாளே!

**இளையாள் :** (அங்கு வந்து) என்னடி, பாசாங்கு பண்ணுகிறாய்? அருமையாய் வளர்த்த பலாவை வெட்டிவிட்டு அழுகின்றாயா? என்மேல் பழி சுமத்த எண்ணுகின்றாயா? நான் ஏமாறு-

பவள் என்று நினைக்காதே! அவர் வரட்டும்! செய்-ததைச் செய்துவிட்டு, அழுவது வேறு? அழு! அழு! அன்பற்ற அக்காளுக்கு அடியும் உதையும் வேண்டும்!

**மூத்தவள் :** ஐயோ! நான் ஒரு பாவமும் அறியேனே! அடாப்பழி சுமத்துகின்றனே!

**இளையாள் :** அடாப்பழியா! நம் கொல்லையி-லுள்ள மரத்தை வெட்டுவதற்கு வேறு ஆள் வேண்டா. உன்னைத் தவிர இங்கு வரக்கூடியவர் யார்! வேலியே பயிரை அழிப்பது போல நீயே பலாவை அழித்துவிட்டாயே!

(உள்ளே சென்றுவிடுகிறாள்)

**மூத்தவள் :** ஐயோ! நான் என்ன செய்-வேன்! வெறுவாயை மெல்லுகிற அம்மையாருக்கு ஒரு பிடி அவல் கிடைத்தால் சும்மா இருப்பாளோ? கணவன் காரணமில்லாதபோது அடித்து உதைப்-பானே? 'பலாவைப் பாதுகாத்துக்கொள்,' என்று சொல்லிச் சென்றானே! பலாவைக் கூழைப்பலா ஆக்கிவிட்டாளே!

(அழுது புலம்புகிறாள். அவ்வழியே ஔவையார் வருகின்றார்.)

**ஔவை :** (மூத்தவளைப் பார்த்து) யாரம்மா? அழுது அழுது கண் வீங்கிவிட்டதே! என்ன காரணம்?

**மூத்தவள் :** பாட்டி, என் குறையைச் சொல்லி என்ன பயன்?

**ஔவை :** அம்மா, உன் குறையைச் சொல். என்னால் இயன்ற உதவி செய்கின்றேன்.

**மூத்தவள் :** அம்மா, எங்கள் வீட்டுக்காரன் அழகர் மலைக்குச் சென்று ஐந்து தினங்கள் ஆகின்றன. கொல்லையிலுள்ள பலா மரத்தை என்

பொறுப்பில் விட்டுச் சென்றான். என் சகக்களத்தி அதனை வெட்டிவிட்டு என்மேல் பழி சுமத்துகிறாள். அவள் சொல் அவனுக்கு ஏறுமேயன்றி என் வார்த்-தைக்கு அவன் சிறிதும் செவி சாய்க்க மாட்டான். என்னைப் படாத பாடு படுத்துவானே என்று அஞ்சுகிறேன்!

(அழுகிறாள்)

ஔவை: அம்மா. அழாதே பலா மரத்தைத் தழைக்கச் செய்யப் பாடுகிறேன்.

கூறியவாளாற் குறைத்திட்ட கூன்பலா
ஓரிதழாய்க் கன்றாய் உயர்மரமாய்ச்—சீரியதோர்
வண்டுபோற் கொட்டையாய் வண்காயாய்த் தின்பழமாய்ப்
பண்டுபோல் நிற்க பரிந்து.



(வாளினாற் குறைக்கப்பட்ட பலா மரமானது ஓரிலை விட்டுக் கன்றாகி, உயர்ந்த மரமாகி, காய்களை உடையதாகி, கனிகளைக் கொண்டதாய் முன்-னிருந்தது போல வளர்ந்து நிற்கின்றது.)

**மூத்தவள்** (ஔவையார் காலில் விழுந்து) நீங்கள்

தெய்வந்தானம்மா! என் வயிற்றில் பாலை வார்த்தீர்களே! உங்களுக்குக் கோடி புண்ணியம் உண்டாகும்! நான் கொடுக்கும் தேனையும் தினைமாவையும் தின்று களைப்பாறுங்கள்.

**ஔவை :** அம்மா, என்னைப் புகழாதே. உன் விருப்பப்படியே தேனும் தினை மாவும் கொண்டு வா.

(தேனும் தினை மாவும் கலந்து உண்கிறார்.)

**மூத்தவள் :** அம்மா, என்னிடமுள்ள இம்மூவழக்குத் தினையையும் தருகிறேன். இதையும் எடுத்துச் செல்லுங்கள்.

(மூட்டையாகக் கட்டிக் கொடுக்கிறாள். ஔவையார் எடுத்துச் செல்கிறார்.)

## காட்சி—2

| |
|---|
| **இடம் :** சோழன் அவைக்களம். |
| **பாத்திரங்கள் :** சோழன் குலோத்துங்கன், வாயிற் காவலன், சில புலவர்கள், ஔவையார். |

(சோழன் சிங்காதனத்தில் வீற்றிருக்கின்றான். புலவர்கள் அவனைச் சூழ்ந்திருக்கின்றார்கள்.)

**சோழன் :** புலவர்களே, உங்கள் இன்னுரையால் யான் மகிழ்கின்றேன்! புலவரது சொல்லே புரவலருக்கு என்றும் இன்பந்தருவதாகும்.

**புலவர்கள் :** அரசரே, உங்கள் ஆதரவு இருப்பின், யாங்கள் தமிழ்த் தாய்க்குப் பணியாற்ற முடியும். உங்களைப் போன்ற முடியுடை மன்னர்கள் எங்களைப் புரவாது போயின், எங்கள் புலமையினால் பயன் என்ன? வறியானிடத்துத் தோன்றிய வண்மை போன்று, பயனின்றி முடியுமன்றோ?

வறுமையில் உழல்பவருக்கு வளமிக்க கல்வியால் பயன் யாது? இன்பச் சுவை பயக்கும் இன்கவிகள் எங்ஙனம் அவர் வாயினின்று எழுதல் கூடும்?

**சோழன் :** புலவர்களே, கல்விக்குப் பகை வறுமையன்றோ? வறுமைப் பிணி மிக்கவர் தமிழன்னையை அன்புடன் பேணுவதுமரிதே! இதனை அறிந்த யான் புலவர் பெருமக்களைப் புரக்கும் பொறுப்பேற்றுள்ளேன். எனது நோக்கம் அறிந்து, இந்நாட்டிலுள்ள புலவர் பலர் இங்கெழுந்தருளியுள்ளனர். ஆயினும், நம் தமிழ் மூதாட்டியார் இங்கு வந்திலரே!

**புலவர்கள் :** அரசர் பெருமானே, ஔவைப்பிராட்டியார் அமுதவாக்கு அனைவர்க்கும் பொதுவானது. அரசர் இல்லமென்றும், ஆண்டியின் உறைவிடமென்றும் அவர் வேறுபாடு கொள்பவரல்லர். அவர் எங்குள்ளாரோ, அறியோம்.

**வாயிற்காவலன் :** (அரசனை வணங்கி) அரசரே, தலைவாயில் மூதாட்டியார் ஒருவர் வந்துள்ளார்; உங்களைக் காண விழைகின்றார்.

**சோழன் :** காவலா, கடிதிற்சென்று அவரை அழைத்து வா. (புலவர்களை நோக்கி) புலவீர்காள், வெளியில் ஔவையாரே வந்துள்ளார் போலும்!

(ஔவையார் வருகிறார். யாவரும் எழுந்து நிற்கின்றனர். சோழன் அன்புடன் எதிர்கொண்டு அழைக்கின்றான்.)

**சோழன் :** அம்மையீர், வருக! தமிழன்னையின் தவப்புதல்வியாரே வருக!

**ஔவை :** அரசரே, வாழ்க! புலவர்களே, பெருஞ்சிறப்புறுவீர்களாக!

(அனைவரும் அமர்கின்றனர்.)

**சோழன் :** (ஔவையார் வைத்திருந்த தினை மூட்டையைக் கண்டு) அம்மையீர், புகழ் மூட்டை தாங்கும் நீவிர் சிறு மூட்டை வைத்துள்ளீரே! அஃது யாதென அறியலாமா ?

**ஔவை :** அரசே, அது யாதென அறிதலிற்குற்றம் யாது?

(பாடுகின்றார்.)

கூழைப் பலாத்தழைக்கப் பாடக் குறமகளும்
மூழக் குழக்குத் தினைதந்தாள்—சோழ!கேள் :
உப்புக்கும் பாடிப் புளிக்கும் ஒருகவிதை
ஒப்பிக்கும் என்றன் உளம்.

வாளாற்குறைக்கப்பட்ட பலா மரம் தழைக்கும்படி நான் பாடக் குறமகளும் மூவுழக்குழக்குத் தினையரிசியைக் கொடுத்தாள் ; சோழனே, கேட்பாயாக, உப்பிற்காகவும் புளிக்காகவும் பாடற்பாடுவது என் மனவியற்கை.

**சோழன் :** அம்மையார், உங்கள் தன்மையை அறிந்தேன் ; 'செருக்கில்லாக் கல்வியே சிறப்பீனும்,' என்பதையும் ஓர்ந்தேன். நீங்கள் இங்குச் சில காலம் தங்கிச் செல்ல வேண்டும்.

**ஔவை :** அரசே, உன் விருப்பப்படியே செய்யக் காத்திருக்கிறேன். தமிழ் நாடு என் தாய் நாடு. அதிலுள்ள ஊர்கள் யாவும் என்னூர்களே. ஆதலின், சின்னாள் இங்கிருந்து பின் என் வழிச் செல்வேன்.

(அமர்ந்து இன்னுரையாடுகிறார்.)

## காட்சி–3

**இடம்:** குடியானவன் வீடு.

**பாத்திரங்கள்:** குடியானவன் சுப்பன், அவன் மனைவி, ஔவையார்.

(சுப்பன் வயலிலிருந்து திரும்புகிறான். ஔவையார் எதிரில் வருகிறார்.)

**சுப்பன்:** பாட்டி, மிகவும் களைப்புற்றிருக்கிறீர்களே! ஐயோ, பாவம்! தள்ளாத வயது!

**ஔவை:** அப்பா, களைப்பாய்த்தான் இருக்கிறது! பசியும் மிகுதியாகின்றது? முதுமைப் பருவமன்றோ! தளர்ச்சி மேலிடுகின்றது!

**சுப்பன்:** பாட்டி, தள்ளாத வயதில் இவ்வாறு தனி வழி வரலாமா? எந்த ஊருக்குச் செல்லுகின்றீர்கள்?

**ஔவை:** அப்பா, எனக்கு யாதும் ஊர்; யாவரும் கேளிர். தமிழ் மூதாட்டி நான்; தமிழகம் என் வீடு.

**சுப்பன்:** (வியப்புற்று) பாட்டி, ஔவைப்பாட்டியா நீங்கள்! இவ்வளவு களைப்புற்றிருக்கிறீர்களே! என் வீட்டுக்கு வாருங்கள். உண்டு, களைப்புத் தீர்ந்து போகலாம்.

**ஔவை:** சரி, உன்னுடன் வருகின்றேன்.

**சுப்பன்:** (தனக்குள்ளே) தமிழ்ப்பாட்டி வருகிறாள்; வீட்டிலுள்ள மனைவி என்ன சொல்லுவாளோ, தெரியவில்லையே! அவள் அடங்காப் பெண்ணல்லவா? என்ன செய்வேன்! இதமாகப் பேசி, மனத்தைத் திருத்தி, சிறிது அன்னமிடச் செய்கிறேன்.

(ஔவையார் களைப்புடன் குடியானவன் வீட்டுத் தெருத் திண்ணையில் உட்காருகிறார். குடியானவன் உள்ளே செல்கிறான்)

**மனைவி :** (கணவனை நோக்கி) இன்றைக்குச் சீக்கிரமாகவே வந்துவிட்டாயே ! என்ன செய்தி ?

**சுப்பன் :** வயலுக்குத் தண்ணீர் பாய்ந்து-விட்டது. அதனால் வீட்டுக்குச் சீக்கிரமாய் வந்து-விட்டேன்.

**மனைவி :** சாப்பிட வேண்டுவதுதானே ?

**சுப்பன் :** சாப்பிடவேண்டுவதுதான்; ஆனால், உன் தலைமயிர் குலைந்திருக்கிறதே! அதை வாரி முடித்துக் கட்டுகிறேன். பின்பு சாப்பிடலாம்.

**மனைவி :** சரி.

(உட்காருகிறாள். அவள் அருகில் உட்கார்ந்து இனிமையாகப் பேசிக்கொண்டே ஈருருவுகின்றான்.)

**சுப்பன் :** கண்ணே, நீ தமிழ் மூதாட்டியைப்-பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாயா ?

**மனைவி :** மூதாட்டியோ, மூதேவியோ ! அவ-ளைப்பற்றி நமக்கென்ன கவலை ?

**சுப்பன் :** அவள் தமிழில் சிறந்த அறிவு பெற்றவள் ; பாட்டுக்கள் பாடுவாள் ; எல்லாரும் அவளைக் கொண்டாடுகிறார்கள். அதனாலேதான் கேட்டேன்.

**மனைவி :** எல்லாரும் கொண்டாடினால், நானும் கொண்டாட வேண்டுமா ?

**சுப்பன் :** அவளை உபசரித்தால், செல்வம் பெருகும் என்பார்கள்.

**மனைவி :** அவளை உபசரித்து நமக்குச் செல்-வம் பெருக வேண்டா. நமது உழைப்பினால் செல்-வம் பெருகுவது போதும்.

**சுப்பன் :** செல்வம் பெருகும் என்பதற்காகச் சொல்லவில்லை. நம் வீட்டுக்கு ஔவை வந்தால் உபசரிக்கலாமா எனக் கேட்டேன்.

**மனைவி :** உபசரிக்க வேண்டுமோ !

**சுப்பன் :** (பயந்துகொண்டே) நமது வீட்டுத் திண்ணையில் ஔவை வந்திருக்கிருள். அவளைத்-தான் ஒரு பிடி அன்னம் கொடுத்து உபசரிக்க-லாமா என்று கேட்டேன்.

**மனைவி :** ஓகோ! இதைச் சொல்லத்தான் இவ்வளவு பணிவிடையா? (கோபத்துடன்) உனக்கு அழுவது போதாதென்று ஊருக்கும் அழச் சொல்லு-கிருயா? ஊர் சுற்றும் கிழத்தை இங்கே இழுத்து வந்து உபசரிக்கச் சொல்லுகிருயா? முதலில் உன்னை உபசரிக்கிறேன்.

(வேகமாய்ச் சென்று, கழுநீர்ப்பானையை எடுத்து வந்து அவன் தலைமீது ஊற்றி, முறத்தால் அடிக்கிருள். குடியானவன் வெளியே ஓடுகிருன். அவள் பின்னே அடித்துக்கொண்டே ஓடுகிருள். இதனைக் கண்ட ஔவையார் வியப்புற்றுப் பாடு-கிருர்.)

இருத்தங் கிதம்பேசி ஈரொடுபேன் வாங்கி
விருந்துவந்த தென்று விளம்ப—வருந்திமிக
ஆடினுள் பாடினுள் ஆடிப் பழமுறத்தால்
சாடினுள் ஓடோடத் தான்.

அருகிலிருந்து முகத்தைத் துடைத்து ஈருடன் பேனையும் உருவியெடுத்து, விருந்து வந்ததென்று கணவன் சொல்ல, மனைவி மிகவும் வருந்தி, ஆடிப்-பாடிப் பழமுறத்தைக்கொண்டு அவன் ஓடஓட அடித்தாள்.

**சுப்பன் :** (ஔவையார் காலில் விழுந்து) தாயே, பொறுத்துக்கொள்! அடங்காப் பெண்ணு-யிருக்கிருள். என்ன செய்வேன்!

**ஔவை :** (பாடுகிருர்)

பத்தாவுக் கேற்ற பதிவிரதை உண்டானல்
எத்தாலும் கூடி யிருக்கலாம் ;—சற்றேனும்
ஏறுமா றுக இருப்பாளே யாமாயின்
கூறுமற் சந்நியாசங் கொள்.

கணவனுக்குத் தக்க கற்புடைய மனைவியாயிருந்-தால், எவ்வழியாலும் சேர்ந்து வாழலாம்; சிறி-தாயினும் ஏறுமாறுக இருப்பின், ஒருவரோடும் கூறுமல் சந்நியாசங்கொள்.

**சுப்பன் :** அம்மையீர், அறிவு பெற்றேன் ! இதோ துறவைக் கைக்கொள்ளுகிறேன் !

(ஔவையார் அவ்வீட்டினின்றும் செல்கிறார்.)

**சொற்பொருள் விளக்கம் :**

ஔவையார், தமிழ் நாட்டில் தோன்றிய பெண்பாற்புலவர். தமிழர் இவரைத் தெய்வமாகவே கருதினர். இவர் யாவரிடத்தும் அன்புடன் பழகி, மக்கள் நன்மதிப்பைப் பெற்றவர்.

படாத பாடு படுத்தல் - மிகுந்த துன்பஞ் செய்தல், அகழ்ந்து - தோண்டி, சகக்களத்தி - கணவரின் மறு மனைவி, அடாப்பழி - வீண் பழி, கூழைப்பலா - குறைக்கப்பட்ட பலா, கூன் - வளைவு, இதழ் - இலை, பரிந்து - இரங்கி, வயிற்றில் பால் வார்த்தல் - மனங்குளிரச் செய்தல், தேன் தினை கிழங்கு - குற வரின் உணவுப் பொருள்கள், புலவர் - அறிஞர், புரவலர் - காத் தலில் வல்லவர் (அரசர்), வண்மை - ஈகைத் தன்மை, மூதாட்டி-கிழவி, இதம் - இனிமையான சொல்.

**பயிற்சி :**

1. கட்டுரை எழுது :—
   ஔவையாரும் குறத்தியும்
   ஔவையாரும் அடங்கா மனைவியும்
2. இந்நாடகத்தை நண்பருடன் சேர்ந்து நடி.

# செய்யுட்பகுதி

## 1. கடவுள் வாழ்த்து

வானே !அவ் வானுலவுங் காற்றே ! காற்றின்
வருநெருப்பே ! நெருப்புறும்நீர் வடிவே ! நீரில்
தானேயும் புவியே !அப் புவியில் தங்கும்
தாவரமே ! சங்கமமே ! சாற்று கின்ற
ஊனே !நல் லுயிரே !உள் ஒளியே ! உள்ளத்(து)
உணர்வே !அவ் வுணர்வுகலந்(து) ஊறு கின்ற
தேனே !முக் கனியே !செங் கரும்பே ! பாகின்
தீஞ்சுவையே! அவையனைத்தும் திரண்டதேனே!

திருவருட்பா] [இராமலிங்கசுவாமிகள்

உலகம் யாவையும் தாமுள ஆக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவர் ; அன்னவர்க் கேசரண் நாங்களே. 2

இராமாயணம்] [கம்பர்

அன்பினுக்(கு) உருவம்;நல் அறத்துக்(கு) ஆலயம்;
மன்பதைக்(கு) அருள்மழை வழங்கு பைம்புயல்;
'நின்பரம்' எனநினை வோர்க்கு நித்யபே
ரின்பசஞ் சீவிஎன் ஏசு நாமமே. 3

இரட்சணிய யாத்திரிகம்] [H. A. கிருட்டிண பிள்ளை

### ஆசிரியர் வரலாறு :

1. **இராமலிங்க சுவாமிகள்** மருதூரில் பிறந்தவர் ; சருணீகர் குலம் ; பெற்றோர் இராமையப் பிள்ளை, சின்னம்மையார்; சமயம் சைவம் ; காலம் கி. பி. 1823 முதல் 1873 வரை ; இவர் பாடல்கள் இனிமையும் எளிமையுமுடையன ; அவை திருவருட்பா எனப்படும்.

### சொற்பொருள் விளக்கம் :

வான் - ஆகாயம், நீரில் தான் ஏயும் புவியே - நீரிற்பொருந்திய பூமி வடிவமானவனே, சங்கமம் - அசைகின்ற பொருள், ஊன்-உடல், முக்கனி - வாழை மா பலாக்கனிகள், தீஞ்சுவை - இனிய சுவை.

இறைவன் எல்லாப் பொருளுமாய், எங்கும் நிறைந்தவன் என்பது கருத்து.

### ஆசிரியர் வரலாறு :

2. கம்பர் சோழ நாட்டில் திருவழுந்தூரில் உவச்சர் குலத்தில் பிறந்தவர்; தந்தை - ஆதித்தன்; ஆதரித்தவர் - சடையப்ப வள்ளல்; 'கல்வியிற் பெரியவர் கம்பர்,' என்பர். இவர் இராமாயணத்தை எழுதியவர்.

### சொற்பொருள் விளக்கம் :

உளவாக்கல்-படைத்தல், நிலைபெறுத்தல் - காப்பாற்றுதல், நீக்கல் - அழித்தல், அலகிலா (அலகு + இலா) அளவில்லாத, சரண் - அடைக்கலம்.

ஆக்கல், காத்தல், அழித்தலாகிய முத்தொழிலையுமுடைய தலைவனாகிய இறைவனிடமே அடைக்கலம் புக வேண்டும் என்பது கருத்து.

### ஆசிரியர் வரலாறு :

**கிருட்டிண பிள்ளை** திருநெல்வேலியில் ரெட்டியார்பட்டியிற் பிறந்தவர்; வைணவ மதத்தினின்றும் கிறித்தவ மதத்தைத் தழுவியவர்; கிறித்தவக் கம்பர் எனப்படுவர்; ஐம்பது ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர்.

### சொற்பொருள் விளக்கம் :

ஆலயம் - இருப்பிடம், மன்பதை - மக்கள், பைம்புயல் - கரிய மேகம், பரம் - மேலானது, சஞ்சீவி - உயிர் கொடுக்கும் மருந்து, நாமம் - பெயர்.

அன்பின் வடிவமும் அறத்தின் உறைவிடமும் அருள் பொழியும் மழையுமான இயேசுவைத் துணையாய் அடைந்தவர் அழிவில்லா மறுமையின்பம் பெறுவர் என்பது கருத்து.

# II. அறவுரை

## 1. திருக்குறள்

அகர முதல எழுத்தெல்லாம் ; ஆதி
பகவன் முதற்றே உலகு. 1

அறத்தினூஉங்(கு) ஆக்கமும் இல்லை ; அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு. 2

மகன்தந்தைக்(கு) ஆற்றும் உதவி, 'இவன்தந்தை
என்நோற்றான் கொல்!'எனும் சொல். 3

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் ! அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு. 4

இருந்தோம்பி இல்வாழ்வ(து) எல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு. 5

விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற்(று) அன்று. 6

முகத்தான் அமர்ந்(து)இனிதுநோக்கி,அகத்தானும்
இன்சொ லினதே அறம். 7

நன்றி மறப்பது நன்றன்று ; நன்றல்ல(து)
அன்றே மறப்பது நன்று. 8

சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்-
கோடாமை சான்றோர்க் கணி. [தொருபால் 9

அடக்கம் அமரருள் உய்க்கும் ; அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும். 10

ஒழுக்கம் விழுப்பந் தரலான், ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும். 11

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை. 12

ஒழுக்காறுக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து
அழுக்கா(று) இலாத இயல்பு. 13

ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ வாழும் உயிர்க்கு ? 14

தீயவை தீய பயத்தலான், தீயவை
தீயினும் அஞ்சப் படும். 15

ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு. 16

நல்லா(று) எனினும் கொளல்தீது ; மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று. 17

தோன்றின் புகழொடு தோன்றுக ; அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று. 18

புறந்தூய்மை நீரான் அமையும் ; அகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும். 19

தன்னைத்தான் காக்கின் சினங்காக்க ; காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம். 20

சிறப்பீனும் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா
செய்யாமை மாசற்றார் கோள். 21

தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு. 22

கற்க கசடறக் கற்பவை ; கற்றபின்
நிற்க அதற்குத் தக. 23

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு. 24

மேற்பிறந்தார் ஆயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்றார் அனைத்திலர் பாடு. 25

செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் ; அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை. 26

அறிவுடையார் எல்லாம் உடையார் ; அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர். 27

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போறக் கெடும். 28

உற்றநோய் நீக்கி உறுஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல். 29

நிலத்தியல்பான் நீர்த்திரிந் தற்றாகும் மாந்தர்க்(கு)
இனத்தியல்ப தாகும் அறிவு. 30

நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந்(து) ஊக்கின்
உயிர்க்கிறுதி யாகி விடும். 31

பகல்வெல்லும் கூகையைக் காக்கை ; இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது. 32

கடலோடா கால்வல் நெடுந்தேர் ; கடலோடும்
நாவாயும் ஓடா நிலத்து. 33

காக்கை கரவாக் கரைந்துண்ணும் ; ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே உள. 34

உள்ளிய(து) எய்தல் எளிதுமன் மற்றுந்தான்
உள்ளியது உள்ளப் பெறின் 35

வானோக்கி வாழும் உலகெல்லாம் ; மன்னவன்
கோனோக்கி வாழும் குடி. 36

வெள்ளத் தனைய மலர்நீட்டம் ; மாந்தர்தம்
உள்ளத் தனைய(து) உயர்வு. 37

நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன். 38

முயற்சி திருவினை ஆக்கும் ; முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும். 39

வெள்ளத்(து) அனைய இடும்பை அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும். 40

கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்ட(து) அமைச்சு. 41

ஈற்ருன் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
சான்ருேர் பழிக்கும் வினை. 42

பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து. 43

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு. 44

குணனும் குடிமையும் குற்றமும் குன்ரு
இனனும் அறிந்தியாக்க நட்பு. 45

கனவினும் இன்ஞது மன்ஞே வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு. 46

நிலத்தில் கிடந்தமை கால்காட்டும்; காட்டும்
குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல். 47

தலையின் இழிந்த மயிர்அனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை. 48

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்; சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான். 49

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர் ;மற்(று) எல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர். 50

—திருவள்ளுவர்

**சொற்பொருள் விளக்கம் :**

1. அகர முதல - 'அ' என்னும் எழுத்தை முதலாக உடையன, முதற்று - முதலாக உடையது, ஆதி பகவன் - கடவுளாகிய முதல்வன்.

2. ஊங்கு - மேலான, ஆக்கம் - உயர்வு.

3. ஆற்றும் - செய்யும், என் நோற்ருன்கொல் - என்ன தவம் செய்தானே ?

4. என்பு - எலும்பு (இங்கு உடம்பு).

5. ஓம்பி - காத்து, இல் - மனை (குடும்பம்), வேளாண்மை- உபகாரம்.

6. புறத்ததா(க) - வெளியேயிருக்க, சாவா மருந்து - தேவாமிர்தம்.

7. அமர்ந்து - விரும்பி, அகத்தான் ஆம் - மனத்தோடு பொருந்திய.

8. நன்றி - உதவி, நன்று அல்லது - தீயது.

9. சீர் தூக்கும் கோல் - எடை காட்டும் தராசு. ஒருபால் கோடாமை - ஒரு பக்கமாகச் சாயாதிருத்தல், சான்றோர்-அறிவு ஒழுக்கங்களிற் சிறந்த பெரியோர்.

10. அமரருள் - தேவருக்குள், உய்க்கும் - கொண்டு சேர்க்கும்.

11. விழுப்பம் - மேன்மை, ஓம்பப்படும் - பாதுகாக்கப் படும்.

12. அகழ்வார் - தோண்டுபவர், தலை - சிறந்த கடமை.

13. ஒழுக்காறு - நன்னெறி, அழுக்காறு - பொறாமை.

14. ஏதிலார் - அயலார், காண்கிற்பின் - ஆராய்ந்தறிந் தால், மன்னும் - நிலைபெற்ற.

15. பயத்தலான் - அளித்தலால்.

16. ஊருணி - குளம், உலகு - உயர்ந்த குணமுடையவர், அவாம் - விரும்புகின்ற, திரு - செல்வம்.

17. நல்லாறு - நல்ல வழி, கொளல் - யாசித்தல்.

18. தோன்றின் - பிறந்தால், புகழொடு - புகழுக்கு ஏது வாகிய குணத்துடன்.

19. புறம் - உடம்பு, அகம் - மனம், வாய்மை - உண்மை.

20. சினம் காக்க - கோபம் வராமல் தடுக்க.

21. ஈனும் - தருகின்ற, இன்னா - தீமை, மாசு - குற்றம்.

22. தூங்காமை - சோம்பலின்மை.

23. கசடு - குற்றம், கற்பவை - கற்க வேண்டிய நூல்கள்.

24. எண் - கணிதம், என்ப - என்று சொல்லுவர், எழுத்து - இலக்கிய இலக்கணங்கள்.

25. மேல் - உயர்குடி, கீழ் - தாழ்ந்த குடி, பாடு-பெருமை.

26. செவிச்செல்வம் - கேள்வி மூலமாக வரும் செல்வம், தலை - முதன்மையானது.

27. என் உடையரேனும் - எவ்வளவு செல்வம் பெற்றவரா யிருந்தாலும்.

28. எரி - தீ, வைத்தூறு - வைக்கோல் போர்.

29. உறாமை - வராதபடி, பெற்றியர் - தன்மையர்.

30. திரிந்து அற்று ஆகும் - மாறுபட்டு அத்தன்மையை யுடையதாகும்.

31. கொம்பர் - கொம்பு, அஃது இறந்து ஊக்கின்-அதனைக் கடந்து செல்ல முயன்றால், இறுதி - அழிவு.

32. இகல் - பகைவர், பொழுது - தக்க தருணம்.

33. வன்கால் - வலிய சக்கரம், நாவாய் - கப்பல்.

34. கரவாது-மறையாமல், கரவா - மறையாமல், கரைந்து- கூவி, நீரார் - தன்மையுடையவர்.

35. உள்ளியது - நினைத்தது, எய்தல் - பெறுதல், மன் - நிச்சயம், உள்ளப்பெறின் - நினைத்து முயன்ருல்.

36. வான் - மழை, உலகு - உலகத்து உயிர்கள், குடி - குடி மக்கள்.

37. வெள்ளத்து அனைய - நீரின் அளவின ஆகும்.

38. நெடுநீர் - தாமதம் செய்யும் குணம், மறவி - மறத்தல், மடி - சோம்பல், துயில் - தூக்கம், காமக்கலன் - விரும்பி ஏறும் கப்பல்.

39. திருவினை - செல்வத்தை, முயற்று இன்மை - முயற்சி இல்லாமை, இன்மை - வறுமை.

40. இடும்பை - துன்பம்.

41. கருவி - தொழிலுக்கு உதவும் சாதனங்கள், செய்கை- உபாயம், மாண்டது - மாட்சிமையுடையது.

42. பழிக்கும் வினை - இகழப்படும் தொழில்.

43. ஏமம் - காவல்.

44. உடுக்கை - ஆடை, இடுக்கண் - துன்பம்.

45. குடிமை - குடிப்பிறப்பு, இனன்-சுற்றம், யாக்க-செய்க.

46. கனவிலும் இன்னது - கனவிலும் தீமை தருவதா யிருக்கும்.

47. கால் - முளை, குலம் - நற்குடி.

48. இழிந்த - கீழே விழுந்த, இழிந்தக்கடை - தாழ்ந்தால்.

49. சிறப்பு ஒவ்வா - சிறப்பியல்புகள் ஒப்பாக மாட்டா.

50. வாழ்வார் - சிறப்பாக வாழ்பவர்.

## 2. நன்னெறி

நல்லோர் வரவால் நகைமுகங்கொண் டின்புறீஇ
அல்லோர் வரவால் அழுங்குவார்—வல்லோர்
திருந்தும் தளிர்காட்டித் தென்றல்வரத் தேமா
வருந்தும் சுழல்கால் வர. 1

இன்சொலால் அன்றி இருநீர் வியனுலகம்
வன்சொலால் என்றும் மகிழாதே ;—பொன்செய்
அதிர்வளையாய் ? பொங்கா(து) அழற்கதிரால் தண்ணென்
கதிர்வரவால் பொங்குங் கடல். 2

'எந்தைநல் கூர்ந்தான் இரப்பார்க்கீந் தெ'ன்றவன்
மைந்தர்தம் ஈகை மறுப்பரோ ?—பைந்தொடீஇ !
நின்று பயனுதவி நில்லா அரம்பையின்கீழ்க்
கன்றும் உதவுங் கனி. 3

—சிவப்பிரகாசசுவாமிகள்

ஆசிரியர் வரலாறு :

சிவப்பிரகாசர் ஊர் துறைமங்கலம் ; சகோதரர் - வேலையர் கருணைப்பிரகாசர் என்பவர்கள். இவர் வீரசைவர். சோணசைலமாலை, பிரபுலிங்கலீலை, நன்னெறி என்பன இவர் இயற்றிய நூல்கள்.

சொற்பொருள் விளக்கம் :

1. நகைமுகம் - முகமலர்ச்சி, அல்லோர் - தீயோர், தென்றல் - தென்றற்காற்று, சுழல்கால் - சுழல்காற்று, தேமா - இனிய மாமரம்.

செம்மைக் குணமுடையவர்கள் நல்லவரை விரும்பித் தீயவரை வெறுப்பார்கள் என்பது கருத்து.

2. வியன் உலகம் - பரந்த உலகத்திலுள்ள மக்கள், இருநீர் - கடல், அதிர்வளையாய் - ஒலிக்கின்ற வளையலை அணிந்த பெண்ணே (மகடூஉ முன்னிலை), அழல் கதிர் - சூரியன் (வெப்பமான கிரணங்களை உடையது), தண்ணென் கதிர் - சந்திரன் (குளிர்ந்த கிரணங்களை உடையது.)

'குளிர்ந்த நிலாவொளியையுடைய சந்திரனைக் கண்டு கடல் பொங்கும்; வெப்பமான சூரியனைக் கண்டு அது பொங்குவதில்லை ; அது போன்று, இனிய சொற்களைக் கேட்டு மக்கள் இன்புறுவார்கள், வன்சொற்களைக் கேட்டலால் துன்புறுவார்கள் என்பது கருத்து.

3. எம் + தந்தை - எந்தை, நல்கூர்ந்தான் - வறியவனாயினன், ஈந்து - கொடுத்து, பசுமை + தொடி - பைந்தொடி, தொடீஇ - வளையலை அணிந்தவளே, அரம்பை - வாழை.

'வறியவருக்கு வழங்கித் தம் தந்தை வறியனாயினனென்றெண்ணி, அவன் மக்கள் பிறர்க்கு உதவி செய்யாதிரார்,' என்பது கருத்து.

## 3. நீதி வெண்பா

கொம்புளதற் கைந்து ; குதிரைக்குப் பத்துமுழம் ;
வெம்புகரிக்(கு) ஆயிரந்தான் வேண்டுமே ;—வம்பு
தீங்கினர்தம் கண்ணில் தெரியாத தூரத்து [செறி
நீங்குவதே நல்ல நெறி. 1

செய்யும் ஒருகருமம் தேர்ந்து புரிவதன்றிச்
செய்யின் மனத்தாபம் சேருமே—செய்யவொரு
நற்குடியைக் காத்த நகுலனைமுன் கொன்றமறைப்
பொற்கொடியைச் சேர்துயரம் போல். 2

துர்ச்சனரும் பாம்பும் துலையொக்கி னும்பாம்பு
துர்ச்சனரை யொக்குமோ?தோகையே!–துர்ச்சனர்
எந்தவிதத் தாலும் இணங்காரே ; பாம்புமணி [தாம்
மந்திரத்தால் ஆமே வசம். 3

இந்நூலாசிரியர் இன்னாரென்பது தெரியவில்லை.

**சொற்பொருள் விளக்கம் :**

1. கொம்புளது - கொம்புடைய மிருகம், வெம்புகரி - கோபத்தையுடைய யானை, வம்பு செறி - தீங்கு நிறைந்த.

'தீயோர் மிருகங்களிலும் தீமை செய்பவராதலின், அவரை நீங்கவேண்டும்,' என்பது கருத்து.

2. தேர்ந்து - ஆராய்ந்து, மனத்தாபம் - துக்கம், குடி - குலம் (இங்குக் குழந்தை), நகுலன் - கீரி, மறைப்பொற்கொடி - பிராமண குலத்து அழகிய கொடி போன்ற பெண்.

'ஆராய்ந்து செய்யாதவன் அறிவில்லாதவன். அவன் துன்புறுவான்,' என்பது கருத்து.

3. துலை ஒக்கினும் - சமமாயிருப்பினும், தோகையே - மயில் போன்ற சாயலையுடைய பெண்ணே.

'பாம்பை வசப்படுத்தலாம் ; துட்டரை வசப்படுத்தல் முடியாது,' என்பது கருத்து.

## III. கதை

### காகமும் நாகமும்

கோடுறு சினையிற் காகம்
　　கூடுவைத் தனேக காலம்
பேடொடு கூடி வாழும்
　　பெருமரப் பொந்தில் வந்தே
ஆடிய கரும்பாம் பொன்றங்(கு)
　　அதுபெறும் முட்டை யெல்லாம்
நாடியே குடித்துப் போட
　　நலிந்துளம் மெலிந்து வாடி 1

தன்னுயிர்ப் பாங்க னை
　　சம்புகன் அருகு போய்,'இங்(கு)
என்னசெய் குவன்நான் ?' என்ன,
　　'இதைக்கொலல் அரிதோ ? நீபோய்
மன்னவன் தேவி யாடும்
　　மஞ்சனச் சாலை புக்குப்
பொன்னணி கொண்டு வந்து
　　போடுக பொந்தில்,' என்ன 2

காகம்அப் படியே செய்யக்
　　காவலன் ஏவ லாளர்
ஏகிமா மரத்தின் பொந்தை
　　ஈர்ந்தனர் ! ஈரும் போதில்

நாகமங் கிருந்து சீற,
நறுக்கினர் இருதுண் டாக ;
ஆகையால், உபாயத் தாகா
அருஞ்செயல் எதுவு மின்றே. 3

பஞ்சதந்திரப் பாடல்] [வீரமார்த்தாண்ட தேவர்

**சொற்பொருள் விளக்கம் :**

1. கோடு உறுசினை - கொம்பினுடன் இணைந்துள்ள கிளை, பேடு - பெட்டை, நாடி - ஆராய்ந்து தேடி, நலிந்து - வருந்தி.

2. பாங்கன் - நண்பன், சம்புகன் - நரி, ஆடும் - நீராடும், மஞ்சனச் சாலை - குளிக்கும் அறை.

3. ஏகி - சென்று, ஈர்ந்தனர் - அறுத்தனர், மாமரம் - பெரிய மரம்.

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம் சென்னை 600 008. 131328

# IV. பல சுவை

## அரியது

அரியது கேட்கின் வரிவடி வேலோய்!
அரிதரிது மானிடர் ஆதல் அரிது;
மானிடர் ஆயினும் கூன்குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்தல் அரிது;
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது;
ஞானமும் கல்வியும் நயந்த காலையும்
தானமும் தவமும் தாம்செயல் அரிது;
தானமும் தவமும் தாம்செய்வர் ஆயின்
வானவர் நாடு வழிதிறந் திடுமே. 1

—ஔவையார்

### ஒரு செல்வந்தனிடம் சென்று பலபடியாகப் புகழ்ந்தும் பரிசு பெருமல் பாடியது

கல்லாத ஒருவனையான் கற்ருய் என்றேன்;
காடெறியும் மறவனை நா டாள்வாய் என்றேன்;
பொல்லாத ஒருவனையான் நல்லாய் என்றேன்;
போர்முகத்தை அறியானைப் புலியே(று) என்[றேன்;
மல்லாரும் புயம்என்றேன் சூம்பல் தோளை;
வழங்காத கையனையான் வள்ளல் என்றேன்;
இல்லாது சொன்னேனுக்(கு) இல்லை என்ருன்;
யானும்என் றன் குற்றத்தால் ஏகின் றேனே! 2

—இராமசந்திர கவிராயர்

**சொற்பொருள் விளக்கம் :**

1. வரி வடி வேலோய் - நீண்ட கூர்மையான வேலாயுதத்தை உடையவனே, பேடு - அலி, நயத்தல் - விரும்புதல், வானவர் நாடு - தேவருலகம்.

2. மல் ஆரும் புயம் - வலிமை பொருந்திய தோள், சூம்பல் - மெலிதல், வழங்காத - கொடுக்காத.

APPROVED FOR CLASS USE
BY THE MADRAS TEXT-BOOK COMMITTEE
[Supplement to Part I-B, of the
Fort St. George Gazette dated 13-5-1959, Page 36]

# SELVAN SENTAMIL VACHAKAM

## FORM I—PART I


AUTHOR:
G. MICHAEL PILLAI, M.A.

EDITOR:
MAHAVIDWAN M. V. VENUGOPAULA PILLAI



JEGASELVAN & CO.,
PUBLISHERS
NAGERCOIL :: TIRUCHI


*Copyright*]

*Price*: 75 *n.P.*